Registered N

MAHAMAHOPADHYAYA
...NATH ... CHAUDHARY,
... MADRAS-41

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞ்ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 3. } 1912ஞு மேமீ 15உ
பரீதாபிஞு வைகாசிமீ 2உ { பகுதி 1.

. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
ு. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2 தனிப்பிரதி அண 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.

(*Contents.*)

பக்கம்

1. மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும்—ப. நா.
Masters and How to reach them—By P. Narayana Iye

2. மாஸம்—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.
Month—By R. S. Narayanaswamy Iyer.

3. தசாவதாரங்களின் உண்மை—டி. வி. கோபாலசாமி நாயுடு.
Underlying Truth of the Ten Avatars of Vishnu.
By T. V. Gopalaswamy Naidu.

4. ராமாயணகதாபுருஷர்களின் குணநிசயங்கள்.
பி. எஸ். ஸுப்ரஹ்மண்ய ஐயர். கஎ
Personnel of the Ramayana—By P. S. Subrahmanya Iyer.

5. புத்தகவரவு—பத்திராதிபர். உ(
Review of Books—Editor.

6. சமாசாரம்—பத்திராதிபர். உ
News—Editor.

7. பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம்.
Patanjala Yoga Sutra.

8. வேதாந்த ஸித்தாந்த சமரஸநிலை—மு. வே. உ
Vedanta & Siddhanta—By M. Venkatasamy Nattar.

**கல்யாணி, அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து.**

(ஒரு அருமையான தமிழ் நாவல்.)

---

இது மகா-ா-ா-ஸ்ரீ R. S. நாராயணஸ்வாமி ஐயர் அவர்கள் எழுதிப் பிரஸித்தம் செய்திருக்கிற ஒரு நல்ல தமிழ் நாவல். இதன் விலை அணா 10. வேண்டுவோர் மதுரை வித்யாதர்மபரிபாலநசபையின் ஸெக்ரிடரி மகா-ா-ா-ஸ்ரீ R. ரங்கஸ்வாமி ஐயரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர், வக்கீல்,
ஸெக்ரிடரி, வித்யாதர்மபரிபாலந சபை,
புதுத்தெரு, மதுரை

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மக்ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கிலமீ
15உயில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

## மூன்றாந் தொகுதி.

1912ஸு மேமீ 15உ முதல் 1913ஸு ஏப்பிரல்மீ 15உ வரை
12 சஞ்சிகைகள் கொண்டது.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

# உள்ளுறை.

விஷயம். பக்கம்.


| | | |
|---|---|---|
| ஆகாசகமநமும் அகண்டாகார விர்த்தியும் | சிவராமசுப்பிரமணியன். | ௭௮ |
| ஆகாசத்தை தியாகிக்கும் முறை—A. நீலகண்ட சாஸ்திரி | | ௩௮௦ |
| ஆலயங்கள் முதலான கட்டடங்களின்கண் புலப்படுகின்ற சக்திகளின் உண்மை. | ப. நாராயண ஐயர். | ௩௦௩ |
| இட்டாலியா தேசத்திற்கும் துர்க்கி தேசத்திற்கும் நடந்த யுத்தத்திற்குக் காரணம். | கேசவன். | ௩௨௫ |
| இராமாயணகதாபுருஷர்களின் குணாதிசயங்கள். | பி. எஸ். சுப்பிரமணிய ஐயர். | ௧௭, ௧௦௭, ௧௮௫, ௨௧௬, ௨௪௧ |
| உதயதிசை நக்ஷத்திரத்தின் சங்கம்.—ப. நாராயணையர். | | ௬௦ |
| உபசாந்தம்.—கொ. வடிவேலுசெட்டியார். | | ௫௮ |
| எண்ணங்களின் இரகஸியம்—ப. நாராயணையர். | | ௩௩௫ |
| ஒரு ஜாதியார் முன்னுக்கு வரவேண்டியதற்கு உபாயம் | ஆத்மநாதன் | ௨௬௮ |
| ஸ்ரீமான் கர்னல் ஆல்காட்டு என்பவரின் சரித்திரம்—ப. நாராயணையர் | | ௧௬௬ |
| கீழோகத் தள்ளுண்ட ஜாதியாரை நலப்படுத்தும் முறை | சிவராமன் | ௨௪௯ |
| ஸ்ரீசடகோபர் வைபவம்—மு. ராகவன். | | ௮௨, ௧௧௬, ௧௩௭, ௧௭௫ |


சமாசாரம்:—


| | |
|---|---|
| அங்கிபெஸண்டு அம்மையார் வருகை | ௩௨௩ |
| அமெரிக்கா கண்டத்தை முன்னரே ஹிந்துக்கள் கண்டுபிடித்திருந்தனர். | ௨௯௦ |
| ஆகாசமார்க்கமாய் இந்தியாவிற்கு லண்டன் நகரத்தினின்று யாத்திரை செய்தல். | ௯௭ |
| அதியாற்றின் பிரஹ்மக்ஞாந சபைக்கூட்டம். | ௧௩௯ |
| அதியாற்றில் பிரஹ்மக்ஞாந சபையின் வருஷக் கூட்டம். | ௨௫௬, ௨௯௮ |
| ஆந்திரர்களின் ஸமாஜம். | ௩௩௧ |
| ஆவன்ஆக்டேவியன் ஹ்யூம் என்பாரின் மரணம். | ௧௬௨ |
| இங்கிலாண்டுக்கும் இந்தியாவிற்கும் ரயில்வண்டிமார்க்கம். | ௧௮ |

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| இத்தாலியா துர்க்கி யுத்தம் ஸமாதானம். | ௨௱௭ |
| இந்தியாவில் தர்மங்கள் வரவரக் குறைதல். | ௫0௩ |
| இந்தியாவின் ஜநக்கணக்கு | ௨௫௧ |
| இந்தியர்கள் பலதேசங்களின் கண் வெகுகாலத்திற்கு முன்னர் குடியேறியிருக்கின்றனர். | ௫௩௫ |
| இராஜப்பிரதிநிதியவர்களுக்கு நேர்ந்தவிபத்து. ... | ௨௩௪ |
| ஈக்களின் அபிவிருத்தி, அவைகளின்கெடுதி. ... | ௪௧௧ |
| உயர்ந்த ஓர் உத்தமரின் (ஸ்டெட்டு) மரணம் ... | ௩௫ |
| உலகில் பலபாஷை பேசுகிறவர்களின் எண்ணிக்கை. ... | ௫00 |
| உலகில் மனிதவர்க்கம்தோன்றினகாலம். ... | ௫00 |
| ஒட்டுக் கேட்கும் யந்திரம். ... | ௧௧௧ |
| ஒரு நிரத்தன்மையான பரீக்ஷை. ... | ௧௫0 |
| ஒரு நல்ல விஷயம். ... | ௧௩௧ |
| ஒருமணிக்கு 150 மைல் ஓடக்கூடிய ரயில்வண்டி ... | ௩௫௩ |
| கறுப்பான நக்ஷத்திரங்கள். ... | ௯ |
| காகிதத்தால் கைத்துண்டுகள் செய்தல். ... | ௨௪0 |
| காங்கிரெஸ் மஹாசபை. ... | ௨௧௮ |
| காஞ்சிபுரம் பரிஷத். ... | ௨௪ |
| காஞ்சிபுரத்தில் சைவ ஸித்தாந்த ஸபையின் கூட்டம். | ௫00 |
| கும்பாபிஷேகங்கள் ... | ௬௨ |
| சங்கரஜயந்தி தினம் ... | ௩௭ |
| சிருங்ககிரிமடமும் அடுத்த வார்சு நியமநமும் அவர்களின் பட்டாபிஷேகமும் ... | ௫௨ |
| சென்னையின் அநாதைக் குழந்தைகளின் பாதுகாப்பு சபையும், பெஸண்டு அம்மையாரின் உபந்நியாஸமும் | ௫௪௩ |
| ஜப்பான் சக்ரவர்த்தியின் மரணம். ... | ௧௩௨ |
| ஜெனரல் பூத் என்பாரின் மரணம். ... | ௧௪௩ |
| டாக்டர் ரிச்சேர்ட்ஸன் என்பவரின் மரணம். ... | ௪௩ |
| டில்லிநகரில் வைஸ்ராய் முதன்முதல் சட்ட நிரூபண சபையைகூட்டுதல். | ௫௩௪ |
| டெலிபோன் இயந்திரத்தைக் கொண்டு தாலாட்டு செய்தல். | ௫0௨ |
| டைடானிக் என்ற நீராவிக் கப்பலின் விபத்து. ... | ௯௨ |
| தமிழ் அகராதி வேலையின் விவரம் ... | ௩௪௪ |
| தக்ஷிண துருவத்தைக் கண்டுபிடித்த காப்டன்ஸ்காட் என்பவரின் மரணம். | ௯௰௨ |
| திருவனந்தபுரம் பிரஹ்மஞான சபையின் கூட்டம். | ௧௧௩ |

விஷயம். பக்கம்.

திருவாடியில் பரிஷத் கூட்டம் ௨௫௧, ௨௧௧
திவான்பஹதூர் ரகுநாதராயரவர்களின் மரணம். ... ௯௬
தென் ஜில்லாக்களின் பிரஹ்மஞ் ஞான கிளைச் சபைகளின் மகாசபை ௩௯௦
தேங்காயினின்று வெண்ணெய் எடுத்தல். ... ௯௮
தேவகோட்டையில் ஹைஸ்கூல் ஸ்தாபித்தல். ... ௩௩௨
நக்ஷத்திரங்களைக் கணக்கிடும் படம். ... ௩௦௪
நாகப்பட்டணம் சுவாமிகளைப்பற்றிய வரலாறு ... ௩௧௨
நிலக்கரிச் சுரங்கத்தின் தொழிலாளிகளின் கொடுமையும், அதனின்று விளைந்த கலகமும். ௧௨௧
பருத்திச் சக்கையினின்று செங்கல் செய்தல். ... ௯௮
பால்கன் யுத்தம். ... ௨௨௭
பிரஞ்சு பண்டிதாவுக்கு பாரதி என்ற பட்டம் அளித்தல். ௩௯௨
பிரமனும் விஷ்ணுவும் ஈசுவரனின் அடிமுடி தேடல் என்பதின் உண்மை ௩௩௧
பிரஹ்மஞ்ஞான கிளைச் ஸபைகளின் கூட்டம்.—
ஆலப்பிழை. ... ௩௦
ஆருவாமொழி. ... ௧௯
காரைக்கால். ... ௩௬
சித்தூர். ... ௧௫௧
திருநெல்வேலி. ... ௩௩௬
திருப்பூர். ... ௧௫
தூத்துக்குடி. ௧௬௦, ௧௫
வளிவள்ளம். ... ௧௧௩
புகையிலைக் காகிதம். ... ௯௨
பூனையின் கண்காட்சி ... ௩௦௨
பெஸண்ட் அம்மை இங்கிலாண்டினின்று திரும்புதல் ... ௨௨௩
பெஸண்ட் அம்மையின் உபந்யாஸங்கள் ... ௨௫௫
பெஸண்ட் அம்மையாரின் சரித்திரச் சுருக்கம் ... ௧௫
ப்ரபாசங்கர், பம்பாய் கவுன்சில் மெம்பராக ஆனது ... ௨௯௦
மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள ஐக்கிய நாணய சங்கங்களின் மஹாசபை ௩௧௮
மதுரைத் தமிழ்ச்சங்கம் 11-ம் வருஷக்கூட்டம் ... ௯௩
மதுரை தர்மசாஸ்திர சபையில் அத்வைத உபந்யாஸம். ... ௨௫௪
மார்கழி மாதத்தில் உத்ஸவங்கள் ஸபைகள் முதலியன. ... ௨௧௭
மாமிசத்தினின்று பட்டுநூல் செய்தல். ... ௯௩
மின்சார சக்தியால் தூங்கப் பண்ணுதல். ... ௩௦௦
மின்சாரமும் உணவும். ... ௧௧௯
மைலாப்பூர் ஸம்ஸ்க்ருத வித்தியாசாலை. ... ௧௧௨

விஷயம். பக்கம்.

மைலாப்பூர் வெங்கடரமண வைத்யசாலையும், ஆயுர்வேதபாடசாலையும் ... ௧௯௪
யோக உபந்யாஸங்களைப் பத்திய அறிவிப்பு. ... ௬௧
ராக்பெல்லரின்-ஸ்ரீமான்-தர்மச் செலவு. ... ௧௭
ஸ்ரீராமபிரஹ்மக்ஞானக் கிளைச்சபை ... ௩௧௮
லெட்பீட்டர்-ஸ்ரீமான்-வருகை. ... ௨௨௯
வாடியா என்பாரின் உபந்யாஸம்-மதுரையில். ... ௯௬௩
வெங்கோபாசாரிய ரவர்களின்-ஸ்ரீமான். எஸ்.—மரணம். ... ௧௨௮
வெண்தாமரைநான். ... ௩௪
ஷம்பாலா க்ஷேத்ரத்தில் மஹாத்மாக்கள் கூடுதல். ... ௩௪௨
ஸம்ஸ்க்ருத பாஷையின் பூர்வம். ... ௩௬௨
ஸாசிந்த்ரத்தில் பிரஹ்மக்ஞானக் கிளைச்சபை ஸ்தாபகம். ... ௨௫௧
ஸ்டாம்பு மூலம் வரும்படி. ... ௧௩௧
ஹிந்து என்பவன் எவன்? .. ௩௯௮
சமீப காலத்தில் ஒரு அவதார புருஷரை எதிர்பார்த்தல். ப. நா. ௬௯
கிலக்திப் பூச்சி—N. S. ஜம்புநாதன். ... ௫௨
சுமதி என்னும் உத்தமியின் சரித்திரம். } எஸ். சாமிநாதையர். ௧௮௧, ௨௨௦, ௩௪௩
டி. சுப்பராவ் அவர்கள்-பிரஹ்மஸ்ரீ-சரித்திரம்.—ப. நா. ... ௨௬௧
சைவசமயம்—பொ. முத்தையாபிள்ளை. ... ௧௫௭
ஞான இந்திரியங்கள் எத்தனை?—சுப்பிரமணியன். ... ௨௭௪
தசாவதாரங்களின் உண்மை—டி. வி. கோபாலஸாமிநாயுடு. ௯, ௪௧.
தாமோதர் கே. மவலாங்கர் சரித்திரம். ப. நா. ... ௧௩௩
திருவள்ளுவரும் ஸமரஸஸன்மார்க்கமும் } மு. வேங்கடசாமிநாட்டார். ௨௦௭
தீபாவளியின் ஆராய்ச்சி. R. S. நாராயணஸாமி ஐயர். ௩௨௭, ௩௫௭
துகாராம் பாவாவின் சரித்திரம். } A. சிவராவ். ௨௮௬, ௩௧௭, ௩௮௪
தேகமும் தேகியும்.—தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை. ௧௧௧, ௧௪௯
தேவாலயங்களில் நடத்தப் பெறும் கல்யாண உற்சவங்கள். } வி. ராமசந்திரநாயுடு. ௨௦௨
நாம் தூங்குவானேன்.—ப. நாராயணையர். ... ௯௨
பத்திரிகை வரவு:—
கானமேகம் ... ௧௯௦
சக்ரவர்த்தினி ... ௧௨௮

| விஷயம். | பக்கம். |
|---|---|
| லோகோபகாரி ... | ௯௩ |
| வேதாந்த தீபிகை ... | ௨௫௫ |
| ஸங்கீத ஸத்ஸம்ப்ரதாய தீபிகை ... | ௩௯ |
| ஸித்தாந்தம் ... | ௯௩ |
| பிறர்நலம்புரிதலில் கவனிக்கவேண்டிய உண்மைகள்.-ப. நா. | ௨௮௩ |
| **புத்தக வரவு.** | |
| அம்பரீஷோபாக்கியானம் ... | ௫௮௧ |
| ஆர்யமத உபாக்யானம் (இரண்டாம் பாகம்.) ... | ௫௧௨ |
| ஆன்மபோதம். ... | ௧௮௧ |
| இந்திய மாயா விநோதக் கதைகள். ... | ௧௯ |
| இந்திய ஸ்திரீ ரத்னங்கள். ... | ௨௧௯ |
| ஹிந்து பைபில். ... | ௪௨௭ |
| கம்பனும் கலைமகளும். ... | ௨௫௪ |
| சற்குருசரண நிழலில். ... | ௫௧௦ |
| சாந்தோபதேச மஞ்சரி ... | ௫௮௧ |
| சிவப்பிரகாசப் பெருந்திரட்டு. ... | ௨௧௪ |
| சின்னையாசெட்டியார் அவர்களின் வியாஸங்களும் உபந்யாஸங்களும் | ௫௫௦ |
| ஸுசீலாஸ்வயம்வரம். ... | ௨௫ |
| ஸநாதர்மசலாவதீயம். ... | ௯௩ |
| சூதசங்கிதாஸாராம்ருத வசநம். ... | ௪௧௪ |
| சைவஸித்தாந்தத்தில் ஆராய்ச்சி. ... | ௧௧௪ |
| திருக்காளத்திப் புராணம். ... | ௨௫ |
| திருக்குறள் மாட்சி. ... | ௪௮௧ |
| திருமந்திரம் (விசுவநாதபிள்ளைபதிப்பு) ... | ௨௧௪ |
| நளச்சக்கரவர்த்தி நாடகம். ... | ௨௰ |
| பதிவிரதபாரம்யம். ... | ௯௩ |
| பரதன் ... | ௫௮௧ |
| பாகவத வினாவிடை (இரண்டாம்பாகம்.) ... | ௨௫௪ |
| மணிமந்திர ஔஷதம். ... | ௧௮௧ |
| மதவிருக்ஷம். ... | ௧௮௧ |
| மநோதத்துவ தீபிகை. ... | ௪௧௦ |
| மறந்துபோன சில ஆர்யமத உண்மைகள். ... | ௨௧௫ |

# பூர்ணசந்திரோதயம்.

விஷயம். பக்கம்.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| மார்த்தவி பிரியவ்ருதக பரிணயம். ... | ௨௫ |
| மானிட ஜீவியசிந்தாமணி. ... | ௧௯௦ |
| மோகநதாஸ் கந்தி என்பவரின் சரித்திரம். ... | ௪௨௭ |
| ஸ்ரீ. ராமசந்திரர் ... | ௯௩௦ |
| வல்லீ பரிணயம். ... | ௪௯௨ |
| வித்யா தர்மபரிபாலன சபையின் இரண்டாம் வருஷ ரிப்போர்ட்டு. ... | ௩௩௦ |
| விவாஹகால விமர்சம். ... | ௨௨௭ |
| வேதாந்த மகுட சிந்தாமணி. ... | ௨௫௪ |
| வேளிர் வரலாறு. ... | ௩௫௧ |
| புனர்ஜன்மம் உண்டென்பதின் உண்மை—சிவராமன் ... | ௨௭௦ |
| மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும்-ப. நா | ௧,௩௫,௯௭ |
| மாதம். —R. S. நாராயணசாமி ஐயர் ... | ௫,௩௯ |
| மாதாஸ்ரீ ஹெலிநாம்பாள் அம்மையார்—ப. நா. ... | ௨௨௯ |
| லோககுருவின் அவதாரங்கள்—ப. நா. ... | ௩௮௭ |
| வருஷம் அதன் உண்மை:—R. S. நாராயணசாமி ஐயர் | ௧௨௩,௧௫௪ |
| வேதாந்த சித்தாந்த ஸமரஸநிலை—வேங்கடசாமி நாட்டார் | ௨௧,௪௫ |
| ஜீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது—பொ. முத்தையபிள்ளை | ௨௪௯ |
| ஸன்மார்க்க முறையில் ஹிதோபதேசம். ப.நா | ௯௫, ௧௯௭, ௨௩௯,௨௯௪,௩௦௯,௩௪௧ |
| ஸம்ஸார பாலைவனத்தைக் கடலாக்குதல்—ஆத்மநாதன். | ௨௪௭ |
| ஹிந்துக்களின் பூர்வநூல்கள்—ஆர். எஸ். நாராயணசாமி ஐயர் | ௨௯௦ |


பத்திராதிபர்.

# பூர்ணசந்திரோதயத்தின் மூன்றாம் வருஷப்பிறப்பு.

---

இறைவன் அருளாலும் குருதேவர்களுடைய அநுக்ரஹத்தாலும் இப்பத்திரிகைக்கு 2 ஆண்டு நிறைந்து 3-ம் ஆண்டு ஆரம்பம் ஆகிறது. முதலாம் ஆண்டைவிட இரண்டாம் ஆண்டில் 12 பக்கங்கள் அதிகமாக வெளிவந்ததும் தவிர யோகசூத்திரம் வியாக்யாநத்துடன் தமிழில் மொழிபெயர்த்து, அநுபந்தமாகச் சென்ற மாதமுடிய 76 பக்கங்கள் பிரசுரம் செய்யப்பட்டுவந்திருக்கின்றன. இவ்வருஷத்தில் யோகசூத்திரம் முடிந்ததின்மேல் மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையார் யோகவிஷயத்தைப்பற்றிக் காசியில் செய்த அருமையான நான்கு உபந்யாஸங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பவை பிரசுரம் செய்யப்படும். மேலும் அநேக வித்வான்களுடைய உதவியால் முன்னரைவிட ஞான விஷயமான வியாஸங்கள் இந்த வருடம் அதிகமாகப் பிரசுரிப்போம். சந்தாதாரர்கள் இந்தப் பத்திரிகையை இன்னும் அதிகமாக அபிமானித்துப் புதிய சந்தாதாரர்களை ஏற்படுத்திக் கொடுக்கும்படியாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

பத்திராதிபர்.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 3. } 1912ஞ் மேமீ 15உ பரிதாபிஞ் வைகாசிமீ 2உ } பகுதி 1.

ஓம்

## மஹாத்மாக்களும், அவர்களையடையும் மார்க்கமும்.

“உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வராந்நிபோதத
க்ஷுரஸ்ய தாரா நிசிதா துரத்யயா
துர்கம் பதஸ்தத் கவயோ வதந்தி॥”

“எழுமின்! விழிமின்! பெரியாரை அணுகுமின்! அவரிடம் அறிமின்! தெளிமின். தீட்டிய கத்திமுனைபோல் அம்மார்க்கம் உள்ளது. கஷ்ட சாத்தியமானது.” —கடோபநிஷத்.

1. பூர்வ சரித்திரங்களைப் பார்த்தோமாகில் அந்தந்தக் காலங்களிலுள்ள சாதாரண ஜநங்களைவிட உயர்நலமமைந்த மஹாபுருஷர்கள் இருந்தார்கள் என்பதை அறிவோம். அவர்கள் உலகத்தில் மறக்க வொண்ணாத சில முக்கிய அடையாளங்களை ஏற்படுத்திவிட்டுப் பின்பு மறைந்திருப்பதையும் காண்போம். ஆதிகாலத்தில் அவர்களை ஜநங்கள் சிரத்தா பக்தியுடனே ஆதரித்திருக்கிறதுமல்லாமல் பூஜித்தும் வந்திருக்கிறார்கள். தெய்வத்தன்மை பொருந்திய ராஜ குடும்பங்களென்ன, தெய்வத்தன்மை பொருந்திய ராஜாக்களென்ன, தெய்வத்தன்மை பொருந்திய குருக்களென்ன, இவர்களைப் பற்றியெல்லாம் சரித்திரம் ஏற்படுவதற்கு முன்னர்ப் பல கதைகள் நடைபெற்றிருந்திருக்கின்றன. அவர்களுக்கு அக்காலத்திய ஜநங்கள் ஈசுவரனைப் போலவே வந்தனை வழிபாடுகள் செய்துவந்தி

ருக்கிறார்கள். தேவர்களைப் போலவே அவர்களையும் ஆராதித்திருக்கிறார்கள். சரித்திரம் ஆரம்பித்த பிற்பட்ட காலத்திலும் இத்தன்மையான கம்பீரமான மஹாபுருஷர்கள் அப்போதைக்கப்போது உலகில் தோன்றுவதைக் காண்போம். ஆனால், முற்காலத்தைப் போல இம்மஹாபுருஷர்கள் சிம்மாசனாதிபதிகளாகவாவது, சிற்றரசர்களாகவாவது தேவஸ்தான தர்மகர்த்தர்களாகவாவது அல்லது சமயாசார்ய மடத்தில் அதிபதியாகவாவது இராமல், இக்காலத்தில் சாதாரணமான ஏழை ஜநங்களில் ஒருவராக இவர் தோன்றுவாராயினர். இராஜ அதிகாரம் பெற்றிருந்தாரில்லை, சமயாசார்ய குருபீடம் பெற்றிருந்தாரில்லை. ஆயினும் அக்காலத்திய ஜநங்களை விட ஞாநசம்பத்தில் உயர்ந்தவராய் எல்லோராலும் பூஜிக்கப்பெற்றவராய் விளங்கினார். அக்காலத்தில், உலகப்பெருமை பெற்றவர்களின் பெயர் மங்கியிருக்கும், இவர் நாமம் மட்டிலும் அன்றுபோல் இன்றும் விளங்குகிறது. அக்காலத்திலிருந்த அரசரென்ன, மந்திரிமாரென்ன, சேனாபதிகளென்ன இவர்போன்ற செல்வம், செல்வாக்குள்ளவர்களின் பெயர்கள் ஜநங்களின் சிந்தனையிலிருந்து விலகிவிட்டன. உயர் நலமமைந்த ஞாநசம்பத்துப் பெற்ற மஹாபுருஷர்களின் பெயர்களோ ஜநசமூகத்தின் சிந்தனையில் இன்னும் குடிகொண்டிருக்கின்றன. முற்காலத்தில், கிரீஸ் தேசத்தைப் படையெடுத்த ஜர்க்ஸீ (Xerxes) சக்கரவர்த்தியின் பெயரை இக்காலத்தில் நினைப்பாருண்டோ? ரோமாபுரியை ஆண்டு ஸம்ராட் பட்டம் பெற்ற அகஸ்டியஸ் சக்கரவர்த்தியின் பெயரை நினைப்பாருண்டோ? இந்தியாதேசத்தில் எத்தனையோ முடிமன்னர்கள் இருந்திருக்கிறார்களே! அவர்களைப்பற்றி நினைப்பாருண்டோ? அல்லது அன்புடன் அவரைப்பற்றிப் பேசுவாருண்டோ? இல்லையே! ஆனால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனென்ன, பகவான் புத்தரென்ன, கிறிஸ்துவென்ன, இவர்களைப் போன்றவர்களின் ஞாபகம், மனிதர்களின் ஹிருதயத்தில் அன்றுபோலின்றும் தங்கியிருக்கிறது. அவர்களை ஜநங்கள் அன்றுபோலின்றும் அன்புடன் பாராட்டுகின்றார்கள். நாளாக நாளாக இவர்களது மஹிமையும் காம்பீர்யமும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. புதிய புதிய மாதிரியான பக்தி ரஸத்தாலும், காநரஸத்தாலும் இம்மஹா

புருஷர்களின் ஞாபகத்தை ஜநங்கள் கொண்டாடுகிறார்கள். அவர்கள், ஸ்தூல சரீரத்துடன் உலகத்தில் நடைபெற்ற காலத்தில் அவர்களை அக்காலத்திய ஜநங்கள் ஓரோர் சமயத்தில் அநாதரவு பண்ணித் தள்ளியிருக்கலாம். ஆயினும் அவர்களுடைய பெயர்கள் நிச்சயமாகக் காலம் செல்லச் செல்ல அதிக சக்தியையும் மஹத்துவத்தையும் அடைந்துவருகின்றன.

2. இம்மஹாபுருஷர்களின் இலக்ஷணம் என்ன? உலகத்தில் பெருமைபெற்றவர்கள் எத்தனையோ பெயரிருக்க, அவர்களின் பெயர் மங்கி மறைபவும், இம் மஹாபுருஷர்களின் பெயர் மேன்மேலும் உயர்வுபெற்று நித்தியமாயிருக்கவுங் காரணம் என்னை? அவர்களுடைய ஞாந சம்பத்தின் பெருக்கமும், அவர்களின் தூய்மையான சித்தத்தின் தெளிவும், அவர் தம் காருண்ணியத்தின் விரிவும், அவர் தம் அன்பின் மிகுதியுமே இதற்குக்காரணமாம். இவர்கள் ஜநசமூகத்தின் குரவர்களாவார்கள். இவர்களைத்தான் ஜநங்கள் லோக குருக்களாகப் பிரியத்துடன் அங்கிகரித்து, ஆராதிப்பார்கள். இவர்கள் உலகத்தாரின் ஹிருதயத்தைக் கவர்ந்த மஹாபுருஷர்கள். உலகத்தாரை ஞாநமுறையில் அடிமைகொண்ட சிரேஷ்டர்களாவர்.

3. அக்காலத்திலிருந்த மஹாபுருஷர்களைப் போலவே இக்காலத்திலும் அத்தகைய மஹாபுருஷர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எவ்விதம் பூஜார்ஹர்களாகவிருந்திருக்கின்றார்களோ, அவ்விதமே இப்போதுமிருக்கிறார்கள். சரித்திரவாயிலாகத் தெரிந்த மஹாபுருஷர்களே இன்றுமிருக்கிறார்கள் என நம்ப இடமுண்டு. மஹாபுருஷர், மஹரிஷி, மஹாத்மா என்ற விஷயமானது வெறுமையான ஏட்டுச் சுரைக்காயன்று. அவர்கள் இன்றுமிருக்கிறார்கள். மனித சரீரத்துடனிருந்துகொண்டு ஞாநமுறையில் பாலர்களாகிய உலக ஜநங்களை நல்வழிப்படுத்திக்கொண்டுவருகின்றார்கள். எவ்விதம் தாங்கள் ஈசுவரப் பிரகாசம் பெற்று ஞாநஜ்யோதிஸாக விளங்குகின்றார்களோ, அவ்விதமே, உலகத்தார்களும் ஞாநஜ்யோதிஸ்களாகவாகி விளங்கவாமென்பதை அறிவுறுத்தும்பொருட்டும் உலகில் மனிதர்களுடன் நேரான சம்பந்தத்தை வைத்துக்கொண்டு நிகழ்கின்றார்கள்

4. "குரு" என்ற வார்த்தையைச் சொன்னோமாகில் "சிஷ்யன்" என்ற வார்த்தையும் எதிர்ப்படும். குரு சிஷ்யர்கள் என்ற பதங்கள் இணைபிரியாத இரட்டை. முற்காலத்தைப் போலவே இக்காலத்திலும் குரு இருந்தால் சிஷ்யன் ஏற்படுவான். இக்காலத்திலும் "குருக்"கள் இருக்கின்றார்கள்; அதனால் அவர்களுக்குத் தகுந்த சிஷ்யர்களும் அமைவார்கள். இப்படிச் சொல்லுவதில்தான் இக்காலத்தில் மனிதர்கள் மனத்தில் கோபம் ஜனிக்கிறது. எல்லா மதங்களிலும் மஹாத்மாக்களான குருக்கள் இருந்திருக்கிறார்களென்ற பிரஸ்தாபம் உண்டு. அத்தன்மையான மஹாத்மாக்கள் இக்காலத்திலும் இருக்கிறார்களென்று பிர்ஹ்மஞானசபையார் சொல்லுவதில் குற்றம் யாதோ? முன் சம்பவித்த பிரகாரம் இக்காலத்திலும் ஏன் சம்பவிக்கக்கூடாது? ஆக்ஷேபிக்கின்றவர் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றார். பிரஹ்மஞான சபையாரது அபிப்பிராயத்தில் மத சம்பந்தப்பட்ட ஞானோபதேசங்கள் ஒரு குறிப்பிட்ட மனிதனைப்பற்றியாவது, ஒரு குறிப்பிட்ட மத சம்பிரதாயத்தைப் பற்றியாவது, ஓர் குறிப்பிட்ட புத்தகத்தைப்பற்றியாவது உள்ள ஆதாரத்தைக்கொண்டு மாத்திரம் நடைபெறுகின்றனவல்ல. அவைகள் இக்காலத்திலும் மஹாபுருஷர்களிடமிருந்து நேரில் அநுபவவித்தமாய் ஏற்பட்டவைகளே. நேரில் சாக்ஷாத்கரிக்கக் கூடியவைகளே. ஏனென்றால் முற்காலத்தில் இந்டியா முதலிய தேசத்திலும் இமயமலை முதலிய மலைபடிவாரங்களிலும் மஹாத்மாக்கள் பூமியை ஸ்பரிசித்து எவ்விதம் நடைபெற்றார்களோ, அவ்விதம் இப்போழுதும் மஹாத்மாக்கள் பூமியை ஸ்பரிசித்து நடைபெறுகின்றார்கள்.

(இன்னும் வரும்.)

டீ. நா.

---

உபயோகிக்கப்பட்டுவந்திருக்கின்றது. தற்காலத்தில் ஐரோப்பாவில் வழங்கிவரும் ஜனவரி முதலான மாத அளவுகள், முன் நடைபெற்ற ஸாவந அளவின் சீர்திருத்தமென்றே ஊகிக்கப்படுகின்றது.

(2) நாக்ஷத்ரமாஸம்: இது சந்திரகதியைச் சார்ந்தது. சந்திரன் பூமியை ஒரு தடவை சுற்றி, தான் புறப்பட்ட ஸ்தாநத்துக்கு வந்துசேரச் சுமார் $27\frac{1}{2}$ (துல்யமாய் 27·55) நாட்களாகின்றன. மேற்கூறியபடி சந்திரவீதியானது அசுவநி முதலான 27 (அபிஜித் நக்ஷத்ர முள்பட 28) நக்ஷத்ரபாகங்களாய்ப் பிரிக்கப்பட்டிருப்பதாலும், சந்திரன் ஒரு நக்ஷத்ரபாகம் செல்லச் சுமார் ஒரு திநம் செல்வதாலும், $27\frac{1}{2}$ திநங்கள்கொண்ட இந்தக் கால அளவுக்கு நாக்ஷத்ர மாஸம் என்று பெயர். நாக்ஷத்ர மாஸமானது சூர்யோதயாதியான லௌகிக திந அளவுக்கு ஒத்துவரும்பொருட்டு, $(27\frac{1}{2}+27\frac{1}{2}) = 55$ திநங்கள் கொண்ட இரண்டு நாக்ஷத்ர மாஸங்கள் 28 முழுதிநங்கள் கொண்ட ஒரு மாதமாகவும், 27 திநங்கள் கொண்ட ஒரு மாதமாகவும் கணக்கிடப்பட்டுவந்தன. இது முற்காலத்தில் அநுஷ்டிக்கப்பட்டுவந்ததாய்ச் சிற்சில கிரந்தங்களில் ஆதாரங்களகப்படுகின்றன.

(3) ஸௌரமாஸம் (Solar month) சூர்யவீதியானது மேஷம் முதலான 12 ராசிபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும், ஒவ்வொரு ராசிபாகமும் 30 அம்ச அளவுள்ளதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. சூரியன் ஒரு ஸ்தாநத் (உதாஹரணம், மேஷாதி அல்லது ‘O’ ஸ்தாநத்)தினின்றும் புறப்பட்டு ஆகாசச்சக்கரத்தைச் சுற்றிக்கொண்டு, மறுபடி ‘O’ ஸ்தாநத்துக்கு வருவதற்குச் சுமார் $365\frac{1}{4}$ நாட்கள் செல்லுகின்றன. இவ்வாறு ஆகாச ப்ரதக்ஷிணம் செய்துவருகையில், மேஷம் முதலான 12 ராசிகளிலும் சூரியன் செல்லுகின்றான். சூரியன் ஏதாவது ஒரு ராசியில் ப்ரவேசிக்கும் ஸமயத்துக்கு ஸங்க்ராந்தி யென்று பெயர். அது அந்தந்த ராசியின் பெயரை யநுசரித்து, மேஷ ஸங்க்ராந்தி, விருஷப சங்க்ராந்தி யென முறையே பெயரிடப்பட்டிருக்கின்றது. ஒரு ஸங்க்ராந்தி முதல், அடுத்த ஸங்க்ராந்தி வரை செல்லக்கூடிய காலத்துக்கு ஸௌரமாஸம் என்று பெயர். ஸௌரமாஸங்கள் சூரியன் ஸஞ்சரிக்கும் ராசியின் பெயரையநுசரித்து மேஷமாஸம் (அல்லது சித்தி

## மாஸம்.

சக்ராகாரமாய்த் தோன்றும் ஆகாசமார்க்கமானது 360 அம்சங் (Degrees) களாகவும், ஒவ்வொன்றும் $13\frac{1}{3}$ அம்சங்கள் கொண்ட 27 நக்ஷத்ரபாகங்களாகவும், ஒவ்வொன்றும் 30 அம்சங்களடங்கிய 12 ராசிபாகங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மேற்கூறிய ஆகாசவட்டமானது கிழக்கு மேற்காயுள்ளது. அதற்குச் சூர்யவீதியென்றும், க்ரகவீதியென்றும், ராசிசக்ரமென்றும் பெயர்.

மேற்கூறிய ஆகாசசக்ர மார்க்கமாய்ச் சந்திரன் முதலான க்ரகங்கள் சுற்றிக்கொண்டு வருகின்றன. உண்மையில், சூர்யமத்ய வித்தாந்தப்படி, சூரியனைச் சுற்றி பூமி, சந்திரன் முதலான மற்ற க்ரகங்கள் ஸஞ்சரிக்கின்றனவாயினும், பூமத்யஸித்தாந்தப்படி பூமியையே சூரியன் முதலானவைகள் சுற்றிவருவதாய் செளகரியத்தின் பொருட்டுக் கணிக்கப்பட்டுவருகின்றது. பூமி ஒருதடவை தன்னைத் தானே சுற்றி வருவதால் ஒரு திநமும், ஒரு தடவை சூரியனைச் சுற்றிவருவதால் ஓர் (ஸெளர) வருஷமும் ஏற்படுகின்றன. சூரிய உதயம் முதல் மறு சூரிய உதயம் வரை செல்லக்கூடிய காலமே திநமாகும். அவ்வாறு சுமார் $365\frac{1}{4}$ நாட்கள்கொண்ட காலமானது மேற்கூறிய வருஷமாகும்.

### மாஸங்கள்.

ஒரு வருஷத்தின் சுமார் 12ல் ஒரு பாக காலமானது மாஸம் எனப்படும். மாஸமானது பற்பல அநுஷ்டாநப்படி, சுமார் 27 முதல் 32 திநங்கள்வரையுள்ள காலமாகும். பலவித கணநப்படி மாஸங்கள், (1) ஸாவநமாஸம், (2) நாக்ஷத்ரமாஸம், (3) ஸௌரமாஸம், (4) சாந்த்ரமாஸம் என நான்கு வகைகளாக அநுஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

(1) ஸாவநமாஸம் (Civil month) என்பது, சரியாய் 30 (ஸெளர) திநங்கள் கொண்ட காலமாகும். இவ்வாறு 12 மாதங்கள் கொண்டது 360 திநங்கள் கொண்ட ஓர் வருஷமாகும். இது ஜ்யௌதிஷ சாஸ்த்ரமுறைக்கிணங்க ஏற்படுத்தப்படாததாயினும், லௌகிக வ்யவஹாரங்களுக்கு மிகவும் இலகுவாய் அநுஷ்டிக்கத்தக்கது. இவ்வித கணநம், முற்காலத்தில் இந்துதேசமுள்பட அநேக தேசங்களிலும், தற்காலத்தில் சிற்சில ப்ரதேசங்களிலும் மாத்திரம்

ரை மாஸம்), விருஷபமாஸம் (அல்லது வைகாசிமாஸம்) என முறையே பெயரிடப்பட்டிருக்கின்றன.*

ஸௌரமாஸங்கள், சூரியகதியைச் சார்ந்திருப்பதாலும், சூரியன் எல்லா ராசிகளிலும் ஒரே வேகமாய்ச் செல்லாததாலும், சமமான கால அளவற்றவைகளாயிருக்கின்றன. சில மாதங்கள் 29 திநங்களுள்ளவைகளாகவும், சில 30, சில 31, சில 32 திநங்களுள்ளவைகளாகவுமிருக்கின்றன.

தவிரவும் ஸௌரமாஸங்கள் மேற்கூறியபடி, முழுதிநங்கள் கொண்டனவென்றாவது ஒவ்வொன்றும் சூரியோதய காலத்தில் ஆரம்பிக்குமென்றாவது சொல்லத்தக்கவையல்ல. அவைகள் மாதக்கடைசி திநத்தில் அல்லது அடுத்த மாதத் துவக்கதிநத்தில் எந்நேரத்திலும் ஆரம்பிக்கலாம். மாஸ ஸங்க்ராந்தியானது சூரிய அஸ்தமநத்துக்கு முன் ஏற்பட்டால் அந்த திநமே மாஸம் பிறக்கிற திநமென்றும், சூர்யாஸ்தமநத்துக்குப் பின் ஏற்பட்டால், மறுநாள் மாஸம் பிறக்கிற திநமென்றும் கணக்கிடப்பட்டுவருகின்றது. ஆகையால் ஏதாவது ஒரு மாஸமானது இந்த வருஷம் 30 திநங்களுள்ளதாயிருந்தால், அடுத்த வருஷம் அந்த மாஸம் 31 திநங்களுள்ளதாகவும் ஆகலாம். உதாஹரணம்: சித்திரைமாதம் பிறந்து, 31-வது திநத்தில் சூரியாஸ்தமநத்துக்கு முன் விருஷப ஸங்க்ராந்தி ஏற்பட்டால் சித்திரை மாதத்துக்கு 30 திநங்கள் மாத்திரமென்றும், 31-வது திநமே விருஷப (வைகாசி) மாஸம் பிறந்துவிடுகின்றதென்றும், ஸங்க்ராந்தி சூரியாஸ்தமநத்துக்குப் பின் ஏற்படின், அந்த வருஷம் சித்திரை மாஸம் 31 திநங்கள் உள்ளதென்றும், வைகாசி௴ 32-வது திநத்தில் பிறக்கிறதென்றும் கணக்கிடப்படும்.

(4) சாந்த்ரமாஸம் (Lunar month): இது சந்திரனுடைய கதியை அநுஸரித்தது. இரண்டு அமாவாஸ்யைகளுக்கு மத்தியிலுள்ள காலம் ஒரு சாந்த்ரமாஸமாகும். அதாவது ஒரு அமாவாஸ்யைக்குப்

---

* குறிப்பு:—(1) சித்திரை௴ = மேஷ௴, (2) வைகாசி௴=விருஷப௴, (3) ஆனி௴=மிதுந௴, (4) ஆடி௴=கடக௴, (5) ஆவணி௴=சிம்ம௴, (6) புரட்டாசி௴=கன்யா௴, (7) ஐப்பசி௴=துலா௴, (8) கார்த்திகை௴=விருச்சிக௴, (9) மார்கழி௴=தனுர்௴, (10) தை௴=மகர௴, (11) மாசி௴=கும்ப௴, (12) பங்குனி௴=மீந௴.

பிறகு, சுக்லப்ரதமை ஆரம்ப சமயமுதல், அடுத்த அமாவாஸ்யை ஈறாகவுள்ள சுமார் 29½ தினங்கள் கொண்டகாலமே சாந்த்ர மாஸமாகும்.

சாந்த்ரமாஸம் முழுதினங்களற்றதாதலாலும், சூரியோதயத்தை யநுசரித்தே அது ஏற்படாததாலாலும், சாந்த்ர மாஸமானது, மேற்சொல்லியபடி, 29½ நாட்களானவுடன், எந்த தினத்திலும் எந் நேரத்திலும் சுக்லபக்ஷ ப்ரதமை ஆரம்ப சமயமுதல் ஆரம்பிக்கும். ஒவ்வொரு சாந்த்ர மாஸமும் அதில் ஏற்படும் ஸௌரமாஸ ஸங்க்ராந்தியின் பெயரை யநுசரித்தே பெயரிடப்பட்டிருக்கின்றது. அதாவது பங்குனிமாஸம், சுக்லபக்ஷ ப்ரதமையில் ஆரம்பிக்கும் சாந்த்ரமாஸமானது (அதில் சித்திரைமாஸ ஸங்க்ராந்தி ஏற்படுவதால்) சைத்ரமாஸம் என்று சொல்லப்படுகின்றது. இவ்வாறே, (2) வைசாகம், (3) ஜ்யேஷ்டம், (4) ஆஷாடம், (5) ச்ராவணம், (6) பாத்ரபதம், (7) ஆச்விநம், (8) கார்த்திகம், (9) மார்க்கசிரம், (10) பௌஷம், (11) மாகம், (12) பால்குநம் எனச் சாந்த்ரமாஸங்கள் பெயரிடப்பட்டிருக்கின்றன.

ஸௌரசாந்த்ரமாஸம்:—ஒவ்வொரு சாந்த்ரமாஸமும் 29½ நாட்கள் அடங்கியது. ஆகையால் 12சாந்த்ரமாஸங்களில் சுமார் 354 தினங்கள் ஆகின்றன. ஒரு ஸௌரவருஷத்தில் 365¼ தினங்களிருப்பதால், ஒரு ஸௌரவர்ஷமானது 12 சாந்த்ரமாஸங்களும் 11¼ தினங்களும் ஆகின்றன. அதாவது இந்த வருஷத்தில் (உதாஹரணம் பங்குனியில்) அமாவாஸ்யை எந்த தினத்தில் ஏற்படுகின்றதோ, அது அடுத்த வருஷத்தில் 11¼ தினங்களுக்கு முன்பே ஏற்படுகி. மேற்கூறிய 11¼ தினங்களுக்கு மிச்சநாட்கள், அல்லது அதிக தினங்கள் (Intercalary days) என்று சொல்லப்படும். ஸௌரமாஸாதியும், சாந்த்ரமாஸாதியும் ஒரே சமயத்தில் தான் துவங்கவேண்டுமென்று கட்டாயமல்ல. அநேகமாய்ச் சாந்த்ரமாஸமானது அதற்குச் சரியான (Corresponding) ஸௌரமாஸ ஸங்க்ராந்திக்குமுன்பாகவேதான் ஆரம்பிக்கின்றது.

(இன்னும் வரும்.)

R. S. நாராயணஸ்வாமி ஐயர்.

# தசாவதாரங்களின் உண்மை.

—*—

அவதாரம் என்பது கீழிறங்குதலெனப் பொருள்படும். ஸ்தூலமான வஸ்துக்கள் கீழ் இருப்பனவாகவும் சூக்ஷ்மமானவை மேலிருப்பனவாகவும் சாதாரணமாய் நாம் மதிக்கிறோம். ஈசுவரனைப் பிரார்த்தனை செய்யவேண்டுமென்றால் அறிஞர்கள் அந்தர்முகப்படுவார்கள். சாதாரண ஜனங்கள் கண்ணை மேல் நோக்கும்படி செய்வார்கள். அதனால் குப்தமாயிருக்கின்ற ஈசுவர சைதந்யம் வெளிப்பட்டு வியக்தப்படுமாகில் அதை "அவதாரம்" என்பார். பொதுவகையாக அர்த்தங் கொள்ளுமிடத்து, நாநாவிதமாகத் தோன்றி வியக்தப்பட்டிருக்கும் ஸ்தாவரங்களென்ன, ஜங்கமங்களென்ன, மனிதர்களென்ன இவை எல்லாம் சேர்ந்த ஜகத்தே ஈசுவரனிடமிருந்து தோன்றினமையால் அதை ஈசுவர அவதாரமென்றே சொல்லலாம். சிறப்புவகையாகக் கொள்ளுமிடத்து "எங்கெங்கே ஐச்வர்யமும் காந்தியும் மஹிமையும் தோன்றுகின்றனவோ அங்கங்கே என்னுடைய தேஜஸ்ஸானது பிரகாசிக்கிறது" என்று கீதா சாஸ்திரத்திற் சொல்லியிருக்கிறபடி ஈசுவரனின் சிறப்பாயிருக்கிற காட்சிக்கு அவதாரம் எனச் சொல்லலாகும்.*

2. ஆனால் உலகம் நலம்பெறுவதற்காகக் குறித்தகர்மத்தை நிறைவேற்றக் குறித்த காலங்களில் குறித்தஸ்வரூபங்களை ஈசுவரன் எடுத்துக்கொள்ளும் அவதாரங்களுக்கு மிகவும் சிறப்புவகையாக இச்சொல் உலகில் வழங்குகிறது.

3. "கீழிறங்குதல்" என்றால் எது, அல்லது யார் இறங்குகிறார்? இக்கேள்விக்கு இரண்டு விதமாக அபிப்பிராயங்கள் உண்டு. லோகரக்ஷணார்த்தம் அப்போதைக்கப்போது ஈசுவரனே சரீரத்தை எடுத்துக்கொண்டுவருகிறார் என்பது ஒரு அபிப்பிராயம். இது பொதுவாய் நம்முடைய தேசத்தில் சாதாரணமாய் நடைபெறுகிறது. ஈசுவரனே ஸாக்ஷாத்தாக மனித உருவம் அல்லது வேறு எந்த ரூபத்தையும் ஸ்வீகரித்துக்கொண்டு தோன்றுகிறாரல்லரென்றும், ஆனால் முந்திய கற்பங்களில் மனிதன் பெறக்கூடிய உயர்வற உயர்நலமுள்ள ஈசுவரத்தன்மையைப் பூர்ணமாகப் பெற்றவரும்,

* பகவத் கீதை 10 அத். 41 சுலோகம்.

ஞாநம், சக்தி, அருள் நிறைந்தவரும், ஈசுவரனுடன் ஸாயுஜ்யம் பெறாமல் தனிப்பட நிற்கின்றவருமான மஹாத்மாக்கள் தாங்கள் பூர்வ கற்பத்தில் அல்லது ஜன்மங்களில் பூமியில் விட்டுப் பிரிந்த ஜகஸமூகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு நன்மை செய்யுமாறு "மறுமைகண்ட மெய்ஞ்ஞாநியர் ஞாலத்துவரினும்" என்றபடி பூமியிற்சரீரம் எடுப்பார்களென்றும் இவர்களே அவதாரபுருஷர்களென்றும் மற்றோரபிப்பிராயமாம். இது பிரஹ்மக்ஞாநதர்சநத்திலுபதேசிக்கப்பட்டுள்ளது. இவ்வபிப்பிராயம் நம்முடைய புராணங்களில முக்கியமாய் ஸ்ரீமத் பாகவதத்திலும் பவிஷ்யபுராணத்திலும் சூசிப்பிக்கப் பெற்றிருக்கிறது. இவ்விரண்டு அபிப்பிராயங்களின் தாரதம்மியத்தைப்பற்றி வியக்தமாய் இப்போது தீர்மானப்படுத்துவது அவசியமில்லை. ஆனால் இவ்விரு அபிப்பிராயங்களுக்கும் சாஸ்திர புஸ்தகங்களில் ஆதாரங்களிருக்கின்றன.

4. அவதாரம் உண்டாகிற விதத்தைப்பற்றி அறியவேண்டுவதவசியம். சிலகாலங்களில் பூமியில் மனிதவுருவமல்லது வேறு உருவத்திற் பிறந்து, அவதரித்துவந்ததற்கான காரியம் முடிவுபெறுகிறவரையில் அவதாரபுருஷன் உலகில் வஸித்து வேலைசெய்கின்றார். சில காலங்களில் ஏற்கனவே பிறந்து வஸித்துக்கொண்டிருக்கிற யாதாமொரு நல்ல மனிதன் சரீரத்தில் ஆவேசித்து, அச்சரீரத்தை உறைவிடமாகக்கொண்டு தாம் உத்தேசித்து வந்த கர்மத்தை அச்சரீரத்தின் மூலமாக நிறைவேற்றிப் பின்பு அச்சரீரத்தை விட்டு வெளியேறி மறைவார். இத்தன்மையான தோற்றத்தை ஆவேசம் என்பார். பரசுராம அவதாரம் இதற்கோர் திருஷ்டாந்தம். க்ஷத்திரியர்கள் சம்பந்தமாகத் தாம் உத்தேசித்து வந்த கார்யம் முடிந்தவுடன் ஸ்ரீ பரசுராமர் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியைச் சந்தித்தார். இருவருக்கும் போர் நேர்ந்தது. பரசுராமர் அபஜயங் கொண்டார். போர் முடிந்தபின் பரசுராமர் சரீரத்தினின்றும் ஒரு ஜ்யோதிஸ் வெளிக்கிளம்பி ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் சரீரத்தில் புகுந்தது. இதற்குப் பிறகு ஸ்ரீ பரசுராமர் ஒரு ரிஷியாகக் காலங்கழித்தனர். யுத்தவித்தையை ஜநங்களுக்குக் கற்பித்துவந்தனர். இவ்விதம் நமது சாஸ்திர புஸ்தகங்களிற் படித்திருக்கின்றோம்.

5. உலகத்தில் எந்த நிலைமை அவதாரம் ஏற்படக் காரண மாகும்? இவ்வினாவிற்குப் பகவத்கீதையின் இரண்டு சுலோகங்க ளால் விடைபெறுகிறோம்,* "எந்தெந்தக் காலங்களில் தர்மத்துக் குக் கெடுதியும், அதர்மத்திற்கு ஏற்றமும் உண்டாகிறதோ அந் தந்தக் காலங்களில் எல்லாம் நான் என்னைச் சிருஷ்டித்துக் கொள்ளு கிறேன், அவதாரம் செய்கிறேன். சாதுக்களுடைய ரக்ஷணத்துக் காகவும் துஷ்டர்களுடைய நாசத்திற்காகவும் தர்மத்தை நிலை நிறுத் தும் பொருட்டும் அந்தந்த யுகத்தில் அவதாரம் செய்கின்றேன், தர்மம் அதர்மம், ஸாது துஷ்க்ருத என்ற வார்த்தைகளை வழக்க மாய்ச் சம்பிரதாயப்படி அர்த்தம் பண்ணாமல் அகன்ற அர்த்தமுள்ள வைகளாக அவைகளைக் கருதவேண்டும். மனித விகாசமுறையில் ஏற்படும் விரிந்த அர்த்தத்தை அவைகளிடம் பொருத்தி நாம் ஆராய்வோம்.

6. பிரபஞ்சமானது மேன்மேலும் அபிவிருத்தியடைந்து கொண்டுவருகிறது. இதை மலர்ச்சி என்றும் விகாசமென்றும் சொல் லுகிறோம். இத்தர்மத்தை அநுசரித்தே மனித வர்க்கமும் மேன்மே லும் விகாஸம்பெற்றுவருகின்றது. இப்படி நடைபெறுகிற விகா ஸமுறை அல்லது அபிவிருத்தி முறையில் நன்மைக்கும் தீமைக்கும், அதாவது தெய்வஸம்பத்துக்கும் ஆஸுரஸம்பத்துக்கும் போராட் டம் எப்போதும் நிகழ்வதுண்டு. இப்போராட்டத்தின் பயனாய்ப் பிரபஞ்சம் அல்லது மனிதவர்க்கம் சிறுகச்சிறுக அபிவிருத்திமுறை யில் படியேறுகிறது. அப்படி அபிவிருத்தி முறை நிகழ்வதில் ஒரு சமயம் தெய்வ ஸம்பத்து ஏற்றம் பெறும்; ஒரு சமயம் ஆஸுர ஸம்பத்து ஏற்றம் பெறும். முன்னது ஏற்றம் பெற்றால் பிரபஞ் சத்தின் லக்ஷ்யமாகிய அபிவிருத்தி முறையாகிய உயர் நிலையை அது நோக்கும். பின்னது ஏற்றம் பெற்றால் அபிவிருத்திமுறையில் தடைகள் ஸம்பவிக்கும். அத்தடைகளைத் தவிர்க்கிறதற்காக ஏற் கனவேயுள்ள முயற்சிகளுடன் அதிகப் பிரயத்தனரூபமாகவுள்ள கர்மம் செய்யும்படி நேரிடும். அவ்விதம் அதிகப் பிரயத்தனம் உண் டாவதைத் தூண்டுவதற்காகவே ஆசுர ஸம்பத்தால் தடைகள் ஏற்-

---

* 4-வது அத். 7, 8 சுலோகங்கள்.

படுகின்றன. திர்க்கமாய் ஆராயுங்கால் இவ்விரண்டு ஸம்பத்துக்களின் இயக்கமும் உலக விஸர்க்கத்திற்கு இன்றியமையாதது. சில சமயம் இவை இரண்டின் போராட்டத்தில் ஆசுரஸம்பத்தின் ஏற்றமும் அதினாலுண்டாகும் தடைகளும், தெய்வஸம்பத்தின் தீவ்ர முயற்சியாலுங்கூட மேற்கொள்ள முடியாமலிருக்கும் சமயத்தில் அவதாரம் ஸம்பவிக்கும்படியாக ஏற்படும். அவதார புருஷர் தம்முடைய அகன்ற பலத்தையும் ஆழ்ந்த அறிவையும் விரிந்த அன்பையும் தெய்வஸம்பத்தின் கக்ஷியில் பரம கருணையால் உபயோகித்து ஆசுரசம்பத்தைத்தாழ்த்தி அபிவிருத்திமுறை தீவ்ரமாய் நடக்கும்படி செய்விப்பார். தர்மம் என்றால் விகாஸமுறையில் தெய்வஸம்பத்தின் செயலாம். ஸாது என்றால் அந்தப் பக்ஷத்தினின்று செயல்புரிகின்றவர். அதர்மம் என்றால் ஆசுரசம்பத்தின் செயல். துஷ்க்ருதர் என்றால் அந்தப்பக்ஷத்தில் தொழில்புரிகின்றவர். நாம் கவனிக்கவேண்டுவது யாதெனில் உலக விகாசமுறையில் ஈசுவர லக்ஷ்யத்தைக் கொண்டுசெலுத்தும் வழியில் இவ்விரண்டு ஸம்பத்து முறைகளும் அவசியமானவை என்பதாம்.

7. அவதாரங்கள் முக்கியமாய் பத்து என்று சொல்லப்படுகிறது. வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பகவான் கௌதமபுத்தனை விலக்கி பலராமனைச் சேர்த்துப் பத்தாகக் கணக்கிடுதல் வழக்கம். இதையே திருமங்கையாழ்வாரும் அடியிற் கண்ட பாசுரத்தில் அறிவித்துள்ளார்.

> மீனோ டாமை கேழலரி குறளாய் முன்னும் இராமனாய்த்
> தானாய்ப் பின்னும் இராமனாய்த் தாமோ தரனாய்க் கற்கியும்
> ஆனான் தன்னைக் கண்ணபுரத் தடியேன் கலிய னொலிசெய்த
> தேனா ரின்சொல் தமிழ்மாலை செப்பப் பாவம் நில்லாவே.*

---

குறிப்பு:—கேழல் = பன்றி. அரி = சிம்ஹம். குறள் = வாமநன் முன்னும் இராமன் = பரசுராமன். தானாய் = தசரதராமன். பின்னும் ராமன்=பலராமன். தாமோதரன்=கிருஷ்ணன். கற்கி=கல்கி அவதாரம்

இது, பகவான் கௌதமபுத்தரின்மேல் நம்மவர்க் கேற்பட்ட விஷம சிந்தனையின் காரியம். ஆனால் ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்ய ரவர்கள் விஷ்ணுபாதாதிகேசாந்தஸ்தோத்ரம் என்னும் தமது கிரந்தத்தில் விஷ்ணுவின் அவதாரங்களைக் கூறுமிடத்தில் அடியில் வருமாறு உபதேசித்துள்ளார்.

𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌃𑌕𑍂𑌰𑍍𑌮𑍋𑌵𑌰𑌾𑌹𑍋𑌨𑌰𑌹𑌰𑌿𑌣𑌪𑌤𑌿𑌰𑍍𑌵𑌾𑌮𑌨𑍋𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑌃।
𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌃 𑌕𑌂𑌸𑌘𑌾𑌤𑍀𑌮𑌨𑌸𑌿𑌜𑌵𑌿𑌜𑌯𑍀𑌯𑌶𑍍𑌚𑌕𑌲𑍍𑌕𑍀𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌂𑌶𑌾𑌵𑌤𑌾𑌰𑌾 𑌭𑍁𑌵𑌨𑌹𑌿𑌤𑌕𑌰𑌾𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌃
𑌪𑌾𑌯𑌾𑌸𑍁𑌰𑍍𑌮𑌾𑌂 𑌤𑌏𑌤𑍇𑌗𑍁𑌰𑍁𑌤𑌰𑌕𑌰𑍁𑌣𑌾𑌭𑌾𑌰𑌖𑌿𑌨𑍍𑌨𑌾𑌶𑌯𑌾
[𑌯𑍇 ॥

இதன்பொருள்:—மத்ஸ்யம், கூர்மம், வராஹம்,நரசிம்மம், வாமனர், ஜமதக்கிகுமாரனாகிய பரசுராமன், காகுத்ஸ்தன், கம்ஸனைக்கொன்றவனாகிய கிருஷ்ணன், (மன்மதனை வென்றவன்,எனப்பெயர்கொண்ட) புத்தர், இனி வரும் கற்கி—ஆகிய இந்த புவனங்களுக்கு க்ஷேமகரர்களும், தர்மத்தை நிலை நிறுத்த வந்தவர்களும், பிரபஞ்சத்தின் துக்கத்தைக் கண்ணுற்று அடங்காத கருணையின் பெரும் பாரத்தால் நொந்த கருத்துடையர்களுமான விஷ்ணுவின் அம்சாவதார மூர்த்திகள் என்னைக் காப்பாற்றுதல்வேண்டும். '𑌮𑌨𑌸𑌿𑌜𑌵𑌿𑌜𑌯𑍀' என்றால் 'புத்தர்' என்று அர்த்தம். 𑌮𑌾𑌰𑌜𑌿𑌤𑍍, 𑌹𑍋𑌕𑌜𑌿𑌤𑍍𑌨𑌃 என்ற நிகண்டையும் காண்க. இவ்விதமே இப்புத்தகத்தில் ஏற்பட்டுள்ள டீகாகாரரும் உரை எழுதியிருக்கிறார்.

மேற்கண்ட சுலோகத்தில் பலராமர் விலக்கப்பட்டிருக்கிறார். இது சரியே.*

8. மேற்கண்ட பத்து அவதாரங்களையும்பற்றிக் கவனமாய்ச் சிந்திப்போமாகில் ஜீவாத்மா ஜங்கமவர்க்கத்திலும் மனிதவர்க்கத்திலும் பலபடிகளேறி விகாஸம் பெற்றுவரும் யாத்திரையில் சில முக்கிய படிநிலைகளைக் (Stages) குறிப்பிடும் என்பதாக அர்த்தங்கொள்ளுதல் கூடும். முதல், இரண்டாவதான மத்ஸ்ய

* இதைப்பற்றிப் பூர்ணசந்திரோதயம் 1-வது தொகுதி 88-வது பக்கம் பார்க்க.

கூர்ம அவதாரங்கள் நாம் வஸிக்கும் கிருஹமாகிய இப்பூமி மீன் ஆமை போன்ற ஜங்கமராசிகள் வஸிக்கிறதற்கு யோக்கியதையுள்ளதாக மாத்திரமிருந்த பழமையான காலத்தைக் குறிக்கின்றன. இவ்விரண்டினுள், மீன் அதிகப் பழமையான காலத்தையும் ஜங்கமவர்க்கம் அபிவிருத்தியடையாதிருந்த நிலைமையையுங் குறிப்பிடும். ஆமையோ என்றால் முன்னதைவிடக் கொஞ்சம் விருத்தியடைந்த ஜங்கமவர்க்ககாலத்தைக் குறிப்பிடும். மூன்றாவதான வராஹாவதாரம் பூமியில் ஜங்கமவர்க்கமானது முலையுண்ணும் ஜீவவர்க்கநிலையைப் (Mammalia) பெற்றதென்பதைச் சூசிப்பிக்கும். அடுத்த அவதாரமாகிய நரஸிம்ஹாவதாரமானது, ஜீவவர்க்கம் மனிதவர்க்கத்தை ஸமீபித்தது என்பதைக் குறிக்கும். ஆனால், மிருகங்களின் சுபாவம் பெரும்பான்மையாகவும் மனிதனின் சுபாவம் சிறுபான்மையாகவும் ஜீவவர்க்கம் பெற்றிருப்பதைத் தெரிவிப்பதற்காக மிருகத்தின் முகமும் மனிதனுடலுமுள்ள நிலைமை ஏற்பட்டது.

9. இதற்கு அடுத்தபடி மனிதனின் நாகரிகம் ஆரம்பமாகுந் தருணம். மிருகத்தன்மையான குரோதாதிகள் ஓய்வடையவும், மநம் விக்ஞாநம் முதலியவைகள் முளைத்து வெளியாகும் சமயம். இது வாமநாவதாரத்தாற் குறிப்பிடப்படுகிறது. வாமநம் என்றால் கிஞ்சித்மநம் அதாவது அற்பமநத்தை யுடையவன், அதாவது மநம் உண்டாக ஆரம்பித்திருக்கிற நிலையிலுள்ள மனிதன். மேலும் இந்தக் குள்ளனான வாமநன், வேண்டுங்கால் மூன்றுலோகங்களையும் பரவும் தன்மையனாகவிருந்தனன். இது மநத் தத்துவம் அணுவாகக்குறுகவும் விபுவாக விரியவும் தகைமையுடையது என்பதை சூசிப்பிக்கின்றது. மேலும் இந்த வாமநன் சக்கரவர்த்தியாகிய பலியைப் பாதளத்தி லழுத்தியதாகவும் பாதாளலோகங்களில் அப்பலியின் வாசற்காப்பானாக விருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. பலி என்பவன் மனிதனிடமுள்ள பலமான அஹங்கார தத்துவத்தின் பிரதிகமாக இருக்கிறான். பலி என்பவன் வல்லமையுள்ள ஈகைக் குணமுள்ள சக்கரவர்த்தியாய்ச் சொல்லப்படுகிறான். ஆனால், அந்த ஈகை அன்பினாலும் அருளினாலும் ஏற்

படாமல் கர்வத்தினலும் அஹங்காரத்தினலும் ஏற்பட்ட ஆடம்பரமான ஈகையாம். இந்த அஹங்காரம் விக்ஞாநத்தால் தான் தணியும். அதனல் இவ்வஹங்காரம் எழாமல் விக்ஞாநம் ஆகிய வாமநன் வாசற்காப்பானகவிருக்கிருன். வாமநாவதாரத்தின் கதையில் இது தெளிவாய் விரிக்கப்பட்டிருக்கிறது.

10. இப்போது மனிதனிடம் மநத்தத்துவம் வியக்தப்பட்டிருக்கும் படிநிலைக்கு வந்திருக்கிறேம். இந்த மநத்தத்துவம் இப்போது ரஜோகுணம் பற்றியதாகவிருக்கிறது. இம் மநத்தத்துவம் மலரவே மனிதவர்க்கத்தின் செயலெல்லாம் ரஜோகுணம் பற்றியனவாக ஜ்வலிக்கின்றன. மனிதவர்க்கத்தில் க்ஷத்திரியர்கள் ப்ராதாந்யம் பெறுகிருர்கள். இவர்கள் ரஜோகுணம் நிரம்பியவர்களாய் எவ்விதத் தங்குதடையுமின்றி எல்லாவிதமான விஷயாநுகர்ச்சிகளிலும் வரம்புகடந்து கிரீடிக்கின்றுர்கள். இனி விகாசமுறையில் ரஜோகுணத்தின் பிரவாகத்தைத் தடுப்பதற்கு அநுகூலமான கர்மம் ஏற்படவேண்டும். இனிவரும் மூன்று அவதாரங்களான பரசுராம, ராம, கிருஷ்ண அவதாரங்களின் செயல் இதுதான். இவர்களில் வாமநாவதாரத்திற்கடுத்த பரசுராமாவதாரம் இந்த ரஜோகுணத்தை அடக்குதல் அதாவது க்ஷத்திரியர்களைக் கீழ்ப்படுத்தலைத் தம்முடைய முக்கிய கர்மமாகத் தலைமேற்கொண்டார். ராம, கிருஷ்ண அவதாரங்கள் இத்தொழிலை மற்றத் தொழில்களுடன் ஒன்ருகக்கருதி நடத்தினர். பரசுராமாவதாரத்தைப்பற்றி அடியில் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

த்ரிஃஸப்தக்ருத்வ: ப்ருதிவீம் க்ருத்வா நிஃக்ஷத்ரியாம் ப்ரபு:॥

—மஹாபாரதம்.

த்ரிஃஸப்த—க்ருத்வ: குபிதோ நிஃக்ஷத்ராமகரோந்மஹீம்॥

—பாகவதம்.

இதன் சாதாரண அர்த்தம்:—இருபத்தொரு தடவை பூமியை க்ஷத்திரியர்களில்லாமற் செய்தார். "த்ரிஃ ஸப்தக்ருத்வ:"

என்ற தொடர்மொழி ஏதோ ஒரு விசேஷ அர்த்தத்தைக் குறிப்பதற்காக ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. ஒருகால் செய்யுளின் சீர் அமைப்பை உத்தேசித்து "இருபத்தொன்று" என்று சொல்லுவதற்குப் பதிலாக இப்பதம் உபயோகிக்கப் பட்டிருக்கிறதென்று நினைக்கலாம். ஆனால் "இருபத்தொன்று" என்று குறிப்பிடப்படும் இடமெல்லாம் செய்யுளின் அமைப்பினால் இத்தொடர்மொழி வேண்டப்பட்டதென்று சொல்லுதல் சரியன்று. இத்தொடர்மொழியின் அமைப்பு ஆழ்ந்த ஒரு அர்த்தத்தைத் தெரிவிக்குமாறு ஏற்பட்டிருக்கிறதெனத் தோன்றுகிறது. மேலும் பூமியை இருபத்தொருதடவை க்ஷத்திரியர்களில்லாமல் போய்த்துப் போகும்படி செய்தாரென்றால் அர்த்தம் இல்லை. முதல்தடவை பூமியானது க்ஷத்திரியர்களில்லாமல் ஏற்பட்டதென்று வைத்துக்கொண்டால், முதல் யுத்தத்தில் சிலர் தப்பியோடி மறைந்திருக்கலாம். இவர்கள்கூட இரண்டாம் மூன்றும் யுத்தங்களில் மாண்டுபோயிருக்கவேண்டும். அப்படிக் கிருக்க இருபத்தொருதரம் க்ஷத்திரியர்கள் இல்லாமற் போகும்படியாக பரசுராமர் யுத்தஞ்செய்ய அவசியம் எப்படி ஏற்படும்? தவிரவும் பூமியானது க்ஷத்திரியர்கள் இல்லாமல் இருந்திருப்பதில்லை. பரசுராமருக்குப்பின்னும் க்ஷத்திரியர்கள் செழித்தும் அபிவிருத்தியடைந்தும் இருந்தார்கள். தம்முடைய பிற்காலத்தில் பரசுராமரே க்ஷத்திரியர்களில் சிலருக்கு யுத்தவித்தை கற்பித்துக் கொடுத்திருக்கிறார் எனத் தெரியவருகிறது. அதனால் மேற்கண்ட சாதாரண அர்த்தம் சரியன்று;வேறு ஆழ்ந்த அர்த்தம் இருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. விஷயங்களைக் கவனிப் போம். எல்லாவிதமான அக்கிரமங்களையும் க்ஷத்திரியர்கள் வரம்பு கடந்து செய்தார்கள். அடியிற்கண்ட காளிதாஸன் வசநங்களிற்கண்டபடி ரக்ஷகமென்ற க்ஷத்திரியதர்மத்தை மறந்தார்கள்.

க்ஷதாத்கில த்ராயத இத்யுதக்ர:
க்ஷத்ரஸ்ய ஶப்தோ புவனேஷு ரூட:।

—ரகுவம்சம்.

க்ஷத்திரியத்வம் என்றால் பலமும் ஆளுகையும் என்று மதித் தார்கள்.

(இன்னும் வரும்.)

T. V. கோபாலசாமி நாயுடு.

## ராமாயணகதாபுருஷர்களின் குணநிசயங்கள்.

### முக்கியமாய் பரதனைப்பற்றியவை.

---

1. ஸ்ரீமத் ராமாயணமானது நமது நாட்டில் ஸர்வமதஸ்தர்களாலும் மேலாகப் பூஜித்துக் கொண்டாடப்பட்டுவரும் இரண்டு இதிஹாஸங்களில் ஒன்று. மற்றொன்று மகாபாரதமாகும். சாமாந்யமாக,

> "പ്രായേണ പൂർവ്വഭാഗാർത്ഥ
> പൂരണം ധർമ്മശാസ്ത്രതഃ ।
> ഇതിഹാസപുരാണാഭ്യാം
> വേദാന്താർത്ഥഃ പ്രകാശ്യതേ ॥"

என்கிற வசநப்படி தர்ம சாஸ்திரங்களாகிய ஸ்மிருதிகளினுல் வேதங்களின் பூர்வபாகமான கர்மகாண்ட தாத்பரியங்களும், புராண இதிஹாஸங்களினுல் வேதங்களின் உத்தரபாகமாகிய உபநிஷத் என்னும் ஞாநகாண்ட தாத்பரியங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன வென்பது பூர்வீகர்களின் கொள்கை. ഇതിഹാസം என்னும் பதம் ഇതി+ഹ+ആസ என்னும் மூன்று அசைகளினுலமைந்தது. ഏവമാസീദിതി (இப்படியே உண்மை) என்று பொருள்படுகிற நாமத்தையுடைய இதிகாசங்களுக்கு விசேஷமாக புராணங்களைக் காட்டிலும் அதிக மேன்மை கூறப்பட்டுள்ளது. ஏனெனில் பொருத்தமில்லாத காரணத்தினுல் சில பிரகரணங்களில் ஸ்தாவகமென்றும், கௌணமென்றும், அர்த்தவாதமென்றும் கொண்டு அநாதரவாக விடப்படும் விஷயங்கள் சிற்சில புராணங்களில் அமைந்துள்ளன. இதிகாசங்களில் அவ்விதமன்று. வேதாந்த தாத்பரியங்களை இதிகாசங்களில் சூக்ஷ்மம், ஸ்தூலம் என்கிற இருமுறையாலும் விவரிக்கப்பட்டிருப்பனவாதலால், அவ்விருமுறையிலும் பொருந்தாத ஒரு விஷயமாவது இதிகாசங்களினுடைய எந்தப் பிரகரணத்திலும் காணப்படாது என்னும் காரணம்பற்றி அவைகளில் மொழியப்பட்டிருப்பதனைத்தும் உண்மையேயாகும் என்று கருதி இதிகாசங்களை உத்தமப் பிரமாணங்களாகப் பெரியோர்கள் கைக்கொண்டிருக்கின்றார்கள். சூக்ஷ்ம முறையானது இதிகாசங்களுக்கு

உபநிஷத்துக்களின் தாத்பரியங்களை (ஜநஸமூஹ) -த்தமாய்) தொடர்ச்சியாய் உரைப்பதாகும். அம்முறை சங்கற்பசூரியோதயம், பிரபோத சந்திரோதயம் முதலியவை போன்றதாம். அதை (Allegorical) உருவகம் என்று கவிகர்கள் சொல்லுவார்கள். ஸ்தூலமுறையாவது ஜீவர்கள் பிறவிக் கடலைத் தாண்டுவதற்கு முக்கியமாக வேண்டிய சாதநங்களைப் பற்பல கதாநாயகர்களுடைய திவ்வியசரித்திரங்களினால் உதாகரித்துக் காட்டுவதாகும். அந்தச் சாதநங்களெல்லாம் அதிகாரி பேதங்களுக்குத் தக்கவாறு அமைந்துள்ள தவம், பிரஹ்மசரியம் உபாஸனை, ஞாநம், பக்தி, யோகம், கர்மத்தியாகம் முதலியவைகளாயுள்ளன. சூக்ஷ்மமுறையை ஆராய்தலானது சுத்த வேதாந்த விசாரம் செய்து அபஹதபாப்மத்துவாதி குணவிசிஷ்டமான பரமாத்மாவின் அநுஸந்தாநத்துக்கு யோக்கியதையுள்ள உத்தம அதிகாரிகளாகிய ஞாந ஸம்பத்தி யுடையவர்களுக்கே உரியது. ஸ்தூல முறையை ஆராய்ந்து ஸம்ஸாரிகள் அந்தந்தகதா நாயகர்கள் நடந்து காட்டியிருக்கும் தர்மங்களைத் தங்கள் தங்கள் அதிகாரக்கிரமமாகக் குறைவின்றி அநுஷ்டித்து இகத்தில் சகல சௌக்கியங்களையும் அடைந்து அந்த சௌக்கியங்களில் ஸங்கமற்ற ஞாநிகளாகி சாசுவதமான பிரஹ்மபதவியையுமடைவார்களென்பது பெரியோர்களின் கருத்து. அப்படியே இராமாயணத்தில் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியை நோக்கி பிரஹ்மா பேசும்பொழுது,

“അമോഘാസ്തേ ഭവിഷ്യന്തി ഭക്തിമന്തശ്ച യേ നരാഃ।
യേ ത്വാം ദേവം ധ്രുവം ഭക്താഃ പുരാണം പുരു
[ഷോത്തമം॥
പ്രാപ്നുവന്തി സദാ കാമാനിഹ ലോകേ പരത്ര ച।
ഇമമാർഷം സ്തവം നിത്യമിതിഹാസം പുരാതനം॥
യേ നരാഃ കീർത്തയിഷ്യന്തി നാസ്തി തേഷാം പരാഭവഃ”

என்று സ്തുതി, ராமனுடைய பரதத்துவவிவேசநம், ராமாயண பாராயணம் இம்மூன்றுக்கும் தனித்தனியாகப் பிரயோஜநங்களை நிர்ணயித்துச் சொல்லியிருக்கின்றார்.

2. அவ்விதமாக இராமாயணத்தில் பல கதாநாயகர்களால் அநுசரித்துக் காட்டப்பட்டிருக்கும் தர்மங்கள் பலவுள்ளன. அந்த கதாநாயகர்களில் ஸ்ரீ ராமன் "வேதவேத்யே பரே பும்ஸி" என்னும் வசநத்தினல் ஸாக்ஷாத் பரப்ரஹ்மமென்றும் இதரர்கள் அநுசரித்து நடக்கமுடியாத அற்புதமான செய்கைகளையுடையவரென்று பொருள்கொள்ளுகிறபடி "ஸ்வேதரஸமஸ்தவஸ்துவிஸஜாதீய ஸர்வஜ்ஞ ஸத்யஸங்கல்ப ஸர்வசக்தி விசித்ரக்ரியாவைபவ ஷௌபகிஹாணம்" என்றும் சொல்லப்பட்டிருப்பதால் அவர் நமக்காக ஆங்காங்கு உபதேசித்திருக்கும் முறைகளை நாம் அநுசரிக்கவேண்டியதே தவிர, அவருடைய செய்கைகள் நாம் அநுசரித்து நடக்கும் பான்மையுடையனவல்ல. சிவதநுசை ஒடித்ததும், பரசுராமனையடக்கியதும், துரும்பைப் பிரயோகித்து காகாசுரனை சிக்ஷித்ததும், பின்பு அவனுக்கு சரணம் அளித்ததும், ஒருவனகப் பதினயிரம் அரக்கர்களை ஒருமுகூர்த்தத்தில் நாசஞ்செய்ததும், ஓர் அம்பினல் வாலியைக் கொன்றதும், கடல் வற்ற பாணம் எய்ததும், சமுத்திரராஜனை வரவழைத்ததும், கடலில் அணைகட்டியதும், விபீஷணனுக்கு சரணமளித்ததும், காந்தர்வாஸ்திரத்தினல் அரக்கர்களில் ஒருவர் கண்ணுக்கு மற்றொருவர் இராமனைப்போல் தோன்றும்படி செய்து அவர்களை ஒருவரை ஒருவர் கொன்றுகொண்டு அழியும்படிசெய்ததும், இறந்துபோன வாநரங்களையுயிர்ப்பித்ததும், சுவர்க்கலோகத்திலிருந்த தந்தை பூமியில் வரப்பார்த்ததும் அமாநுஷமான கிருத்தியங்கள். அவைகள் இதரர்கள் செய்யக்கூடியவைகளல்ல. முக்குணங்களுக்கும் உட்படாத பரமேசுவரனே உலக க்ஷேம நிமித்தமாக அக்குணங்களை வியாஜமாகக் கொண்டு (யோமாயா மநுஷவிக்ரஹ:) இராமனக அவதரித்தபடியால் அவன் செய்கைகளின் தன்மையை அறியவாவது அவைகளை அநுசரிக்கவாவது குணபத்தர்களாகிய நம்மால் முடியாது. ஆனதால் அவனைத்தவிர மற்றக் கதாநாயகர்களுடைய செய்கைகள் தான் நாம் அநுஷ்டிக்கக்கூடிய சுலபப் பிரமாணங்களாகும். அவர்களில் சிலர் சாத்துவிக குணப்பிரதாநர்கள். சிலர் இராஜஸ குணப்பிரதாநர்கள். வெகுபேர்கள் தாமஸ குணப்பிரதாநர்கள். அக்குணங்களின் முக்கிய விர்த்திகளாவன:—

𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂=𑌤𑌤𑍍𑌰 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌮𑌨𑌾𑌮𑌯𑌂।
𑌸𑍁𑌖𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌚𑌾𑌨𑌘 ॥
𑌰𑌜𑌃 = 𑌰𑌜𑍋 𑌰𑌾𑌗𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌤𑍃𑌷𑍍𑌣𑌾𑌸𑌙𑍍𑌗𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌂 ।
𑌤𑌨𑍍𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌦𑍇𑌹𑌿𑌨𑌮𑍍 ॥
𑌤𑌮𑌸𑍍 = 𑌤𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍋𑌹𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂 ।
𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌲𑌸𑍍𑌯𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌭𑌿𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ॥

ஸத்வம் நிர்மலமானதால் சாந்தி, தயை, வைராக்யமுதலியன அதிலிருந்து உண்டாகின்றன. ரஜஸ் ராகாத்மகமானதால் அது சம்பந்தமான காமக்குரோதம் முதலியவைகளுக்கு அது காரணமாகும். தமஸ் அக்ஞானஜமாகையால் அதிலிருந்து எல்லா பாபங்களும், துக்கங்களும் ஜநிக்கின்றன. இப்பொழுது கதாநாயகர்களுடைய விருத்திகளைக் கொண்டு அவர்களுடைய குணப்பிராதாந்யங்களையும், குணப்பிராதாந்யங்களைக் கொண்டு அவர்களுடைய மேன்மை தாழ்மைகளையும் நிச்சயிக்கவேண்டும். முக்கியமான கதாநாயகர்கள்:—

1. இலக்ஷ்மணன். 2. சீதை. 3. ஜடாயு. 4. சுக்கிரீவன். 5. அநுமான். 6. விபீஷணன். 7. மந்தரை. 8. கைகேயி. 9. பரதன் இவர்கள் ஆவார்கள்.

3. இவர்களில் மந்தரையும் கைகேசியும் சாத்துவிக குண லாஞ்சநமேயில்லாமல் சிறுபாகம் ரஜோகுணமும் பெரும்பாகம் தமோ குணமும் உடையவர்கள். அரக்கர்கள் ஸாத்துவிக லாஞ்சநமற்று ரஜோகுணமும் தமோகுணப் பெருக்கினால் இழுக்கையடைந்து தமோகுண வியாபத்தியும் உடையவர்களானதால் விஷத்துக்கு விஷமே மாற்று என்பதுபோல அவர்களை நாசஞ்செய்யும் முயற்சிக்கு தமோகுணப் பிராதாந்யமுள்ள மந்தரையும் கைகேயியும் முதற்காரணமானார்கள். அப்படியே முதற்காரணமாக அவர்கள் துதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(இன்னும் வரும்.)

P. S. ஸுப்ரஹ்மண்ய ஐயர்.

உ

# வேதாந்த சித்தாந்த சமரச நிலை.

---

1. உலகின்கண் முற்காலத்தில் எத்தனையோ பல மதங்களிருந்தன. இக்காலத்திலுமிருக்கின்றன. வருங்காலத்திலெப்படியோ? 'மதம்' என்பது ஜகத் ஜீவ பரங்களைப்பற்றி அவரவர் கொண்ட கொள்கையே. இது 'சமயம்' எனவும்படும். நம் தேயத்து மாந்தர்கள் இதரசாஸ்திரங்களைவிடச் சமயசாஸ்திரங்களில் விசேஷமான மதிப்பும் விசுவாசமுமுடையராயிருந்தனர். அங்ஙனம் உடையராயிருத்தற்குக் காரணம் ஜநந மரண துக்கத்தினின்றும் நீங்கி என்றைக்கு மழியாத பேரின்பவாழ்வை யெய்துதற்குத் தாம் முயலவேண்டுமென்றும் அதற்குரிய வழிகளைத் தத்தம் சமய நூல்களுணர்த்துவனவென்றும் அவர்கள் கருதியிருந்தமையே. அத்தகையர் இக்காலத்துமிருக்கலாம். ஆனால் இக்காலத்தில் அநேகர் சமய நூலுணர்ச்சி சிறிது பெற்றமாத்திரமே தம்மை வேதாந்தி அல்லது சித்தாந்தியெனச் சொல்லிக்கொண்டே, தம்மின்மாறுய அவ்விருவரிலொருவரோடுவாதுபுரிந்து கலகம் விளைக்கக் காண்கின்றேம். அவர்கள் அவ்வாறு நிகழ்த்தற்குக் காரணம் நூல்களின் மெய்ம்மை யுணராமையோ? நூல்கற்றலின் பயன் சொற்போர்புரிந்து வெல்லுதலே என்று கருதினமையோ? அறிகிலேம்.

இனி, எடுத்துக்கொண்ட விஷயத்தைக் குறித்து நடுநின்று அறிவிற்கெட்டியவாறு விசாரிக்கத் தொடங்குதும்.

2. வேதாந்தம் என்பது வேதத்தின் அந்தமாகிய உபநிடதங்கள் எனப் பொருள்படும். சித்தாந்த மென்பது ஆகமாந்தமாகிய முடிபு எனப் பொருள்படும். ஒரு சாரார் வேதத்தையே பிரமாணமாகக் கொண்டு ஆகமத்தையிகழ்ந்தும், மற்றொரு சாரார் ஆகமத்தையே பிரமாணமாகக் கொண்டு வேதத்தையிகழ்ந்தும் வருவாராயினர். சில பெரியோர்கள் இரண்டையும் பிரமாணமாகக் கொண்டனர். வேதசிவாகமங்கள் ஆன்மாக்களின் பொருட்டு இறைவனலருளிச்செய்யப்பட்டனவென்று வேதத்தின் உபப்பிராஹ்மணங்களாகிற புராணங்களிலும் பிறவற்றிலும் கூறப்பட்டிருத்தலால் இரண்டும் பிரமாண நூல்களேயாம். திருமூலயோகிகளும்,

"வேத மொடாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னில் பெரியோர்க் கபேதமே"

என அருளிச்செய்தனர். அபேதமாயிருக்கவும் வேதாந்தம், சித்தாந்தம் என இருவேறு வகையாகப் பிரித்து வழங்குதற்குக் காரணம் பின்வருவனவற்றானறிக.

3. பல்வேறுவகைப்பட்ட பக்குவிகளுக்கேற்பப் பலவற்றையு முபதேசித்து, அதனால் பொதுநூலெனப்பட்டுவந்த வேதத்தில் தீவிரதரபக்குவமுடையார்க்கு முடிந்த மெய்ந்நிலையையுணர்த்துகிற ஞானகாண்டப்பகுதி வேதத்தின் அந்தமாயிருத்தல் பற்றி 'வேதாந்தம்' எனப்பட்டது. அப்பொருளையே மயங்காமல் தெளியவுணர்ந்துகொள்ளுதற் பொருட்டுத் தீவிரதரபக்குவமுடையார்க்குப் பாஷியம்போல் தனித்து வகுத்தருளிய ஆகமங்களின் ஞானபாதப் பொருள் ஏனையவற்றையெல்லாம் பூர்வபக்ஷப்படுத்தி முடிந்த நிலையாய் நிற்றலின் 'சித்தாந்தம்' எனப்பட்டது. இவற்றால் வேதாந்தமும் சித்தாந்தமும் பொருளால் வேறுபட்டனவல்லவென்பது இனிது விளங்கும். இனி, "வேதத்தில் கூறுங்கருமகாண்டப் பொருட்கு இன்றியமையாது வேண்டப்பட்டு எஞ்சி நின்றனவாய பொருள்களையும் வேதமுடிபாயவுபநிடதங்களின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக்கொண்டு இனிது விளக்குதலின் சிவாகமம் சித்தாந்த சாஸ்திரமென்று வழங்கப்படும்" எனச் சிவஞான முனிவர் திராவிடமாபாடியத்துக் கூறினர். அவர், வேதமும் ஆகமமும் இறைவனிடத்து நின்றும் வந்த வரலாற்றை விரித்துரைத்துப் பலவிடத்தும் வேதாகமப் பிராமாண்யம் நிலைநாட்டினர்.

4. இனி, உபநிடதங்களும் ஆகமங்களும் வேதாந்தம் சித்தாந்தம் என்ற பெயர்களைப் பெறவே அவற்றோடு மாறுபாடின்றி வழிவந்த பிற்றைநூல்களும் அப்பெயர் பெறுதற்குரியனவே. பிரஹ்ம சூத்திரம், கைவல்யம், ஞானவாசிட்டம், கீதைகள் முதலியன வேதாந்த மென்பர். சிவஞானபோதம் முதலிய பதினான்கு சாஸ்திரமும், பன்னிருதிருமுறையும், பிறவும் சித்தாந்தமாகும்.

சிவஞானமுனிவர், சிவஞானபோதபாடியத்தில் ஏகான்மவாதம் என்று ஓர் மதத்தினைப் புறச்சமயங்களிலொன்றாகக் கொண்டு, அது மாயாவாதம்,பாற்கரியவாதம், கிரீடாப்பிரஹ்மவாதம்,சப்தப்பிரஹ்ம வாதம் என நான்குவகைப்படுமென்று சொல்லி, ஒவ்வொன்றினிலக் கணமுமுறைத்து, முடிவில் இந்த நால்வகையான ஏகான்மவாதநூல் செய்தவர் வியாசமுநிவர் எனக்கூறினர். மற்றோரிடத்திலும் புறச் சமயங்களோடு வைத்தெண்ணிய வேதாந்தமாவது ஏகான்மவாதங் கூறும் வியாசநூலென்று சர்வான்மசம்புசிவாசாரியர் கூறினரென் றும், வேதாந்தமென்பது யோகப்பெயரால் அவற்றையெடுத்துச் செய்த ஏகான்மவாதநூலையுங் குறிக்குமென்றும் அவர் கூறினர். அங்ஙனங்கூறிய முனிவரே "ஏகான்மவாதிகள் ஞானகாண்டமாத்தி ரைக்கே பிரமாணங்கொண்டு கருமகாண்டத்தையிகழ்தலானும்" எனவுங்கூறினர்! இனி,அவர் கூறிய வியாசநூல் யாதெனப்பார்க்கின் பிரஹ்மசூத்திரமல்லாது வேறிருப்பதாகத் தெரியவில்லை. அந்நூ லுக்கு நீலகண்டவாசிரியர் எழுதியவுரையைச் சிவஞானமுநிவர் பலவிடங்களில் பிரமாணமாகவுங் கொண்டுளார். ஆயின் தம் கருத் திற்கியைந்த சிலவற்றையே மாத்திரம் கொண்டனர் போலும்!!"உத் தரமீமாம்சையினுபதேசம் கொஞ்சங்கூட வேதவிருத்தமல்லவென் றுன்" என்றும், "உத்தரமீமாம்சையெவ்விதத்திலும் வேதவிருத்த மன்று; ஆகையால் அது பிரமாணமானது" என்றும் விசாரசாகரம் என்னுங்கிரந்தங்கூறுகின்றது. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன சில்வாழ்நாட்சிற்றறிவினோருணர்தற்கு வியாசரால் நான்கு கூறாகச் செய்யப்பட்டனவென்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். அத்துணைமாட்சியுடையாரும், சிவஞானமுநிவர் கூற்றின்படியே ஞானகாண்டத்தைப் பிரமாணமாகக் கொண்டவருமாகிய வியாசமு நிவர் வேதவிருத்தமாக ஓர் நூல்செய்தாரெனின் அஃததிசயிக்கத் தக்கதே.

5\. உலகிற்கு அன்னை போன்றவரான ஔவையார்கூறிய,

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியும்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என்னும் பாடலிலுள்ள 'முநி மொழி' என்பது வியாசருளிய பிரஹ்மமீமாம்ஸையெனவே பலர் கூறுகின்றனர். அஃதுண்மையாயின் உபநிடதங்களோடும் ஏனைய சித்தாந்தநூல்களோடும் ஒருங்கு வைத்தெண்ணிய அந்நூல் அவற்றின் மாறுபட்டதாகக் கொள்ள இடமில்லை. முநிவரரும் சிவாசாரியருங் கூறியதுண்மையாயினும் வியாசர் அந்நூல் பெறும் அதிகாரிகளாவார்க்கு அதனையளித்தாரெனக் கொள்ளல் வேண்டுமன்றி வேதப் பொருளுணராது நூல் செய்தாரென்று யாம் கூறுதல் எவ்வாற்றானுஞ் சாலாதென்க.

6. இனி, வேதாந்தத்தின் கருத்தினை முன்னையோர் பலர் பலவிதமாகக் கூறியுள்ளார்கள். முதனூலாகிய உபநிடதங்கள் வெவ்வேறு வகையாக உபதேசித்தலும், ஒவ்வொருவர் ஒவ்வோருபநிடதங்களையே பிரமாணமாகக் கொள்ளுதலும் அதற்குக் காரணமாகலாமென்று நாம் ஊகிக்க இடனாகின்றது. இதனை, "உபநிடதங்களிலும் சுபாலமுதலியவுபநிடதம் உலகந்தோன்றியொடுங்கு முறைமையும், தோற்றியொடுக்குதற் கொருகருத்தாவுண்டென்னு மாத்திரையும் போல்வனவுணர்த்துதலிற் பொதுவெனப்படும். சாந்தோக்கிய முதலியவுபநிடதங்கள் இருவகையுங் கூறுதலிற் பொதுவுஞ்சிறப்புமாம். அதர்வசிகை, அதர்வசிரம், சுவேதாசுவதர முதலியவுபநிடதங்கள் முத்திநிலையே பற்றிச் சாதகமும் பயனும் கூறுதலின் உண்மையெனப்படும். அதர்வசிகை முதலிய வுபநிடதங்களிற் கூறும் பொருள்களும் சிவாகமப்பொருளை நோக்கும் வழிச்சூத்திரமும் பாடியமும் போலத் துலாருந்ததி முறையாம். இக்கருத்துப்பற்றியே வேதம் பொதுநூலெனவும் ஆகமம் சிறப்புநூலெனவும் திருமந்திர முதலியவற்றிற் கூறப்பட்டன வென்றுணர்க என்று ஸ்ரீ சிவஞான ஸ்வாமிகள் கூறியமை வற்புறுத்தாநிற்கும்.

(இன்னும் வரும்.)

மு. வேங்கடசாமி நாட்டார்.

## புத்தகவரவு.

---

**திருக்காளத்திப் புராணம்:**—இது வீரைநகர் ஆநந்தக்கூத்தர் இயற்றியது. இது தேவிகோட்டை ஸ்ரீமான். மே. அரு. நா. இராமநாதன்செட்டியாரவர்களும் ஸ்ரீமான். மே. அரு. அரு. அருணாசலஞ் செட்டியாரவர்களும் விரும்பியபடி சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய உத்தமதானபுரம் மஹாமஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்களால் கையெழுத்துப்பிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து நூதனமாகஎழுதிய அரும்பதவுரைமுதலிய பலவகைஆராய்ச்சிக் குறிப்புகளுடன்சென்னைவைஜயந்தி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது. உயர்ந்தகடிதத்தில் அழகான அக்ஷரங்களுடன்பிழையற பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய ஸ்வாமிநாதஐயரவர்களின் உயர்நலமமைந்த ஆராய்ச்சியுடனேஇப்புத்தகம் பிரஸித்தம் செய்யப்பட்டிருக்கிறது.நாட்டுக்கோட்டை நகரத்தார் இத்தகைய புஸ்தகம் வெளிவரும்படி திரவியஸஹாயம் செய்திருப்பது மெச்சத்தக்கதே. அவர்களுடைய தர்மசிந்தை இஹத்தில் ப்ரேயஸ்ஸையும், பரத்தில் சிரேயஸ்ஸையும் உண்டுபண்ணக்கூடிய நல்வழியில் திரும்பியிருப்பது ஸந்தோஷகரமாயிருக்கிறது. இன்னும் பழைய புத்தகங்கள் முதலியவை வெளிவரும் விஷயத்தில் அதிகமாக வித்வான்களுக்கு ஆதரவு பண்ணுவார்களென்று நம்புகிறோம். மஹாமஹோபாத்தியாயர் ஸ்வாமிநாத ஐயரவர்களுக்கு திரவிய ஸகாயம் அதிகமாக ஏற்படும் பக்ஷத்தில் அவர்களால் முன்னரே ஆராய்ச்சி செய்யப்பெற்றிருக்கின்ற எத்தனையோ அருமையான புத்தகங்கள் வெளிப்படுவதற்கு அநுகூலமாகவிருக்கும். இப்புத்தகத்தைச் சென்னை மஹாமஹோபாத்தியாயர் வே. ஸ்வாமிநாதையரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**மார்த்தவி ப்ரியவதந பரிணயம்:**—ஆங்கிலத்தில் *Shakespeare* என்ற மஹாகவியால் செய்யப்பெற்றிருக்கிற "*Tempest*" நாடகத்தை ஸ்ரீமாந். *Lamb* என்பார் வசந நடையாக எழுதியுள்ளார். அதைக் கும்பகோணம் ஹைஸ்கூல் உபாத்தியாயராக இருந்த கே. வேங்கடராமையரவர்கள் தமிழ்ப்பாஷையில் இணக்கி எளிய தமிழ்நடையில் அதிக ஸக்தியில்லாமல் பிரஸித்தம் செய்திருக்கிறார்கள். இதன் விலை அணா 1½. ஷை ஐயரவர்களிடமிருந்து இப்புஸ்தகம் பெற்றுக்கொள்ளலாம்.

**ஸ்ரீலா ஸ்வயம்வரம்:**—இது ஆங்கிலத்தில் *William Morris* என்ற கவி செய்துள்ள "*The Man born to be a King*" என்ற கதையைத் தமிழ்ப்பாஷையின் ஸம்பிரதாயத்திற்கு ஒற்றுமையாக இசைத்து, தமிழ்ப்பாஷை கற்கும் பிள்ளைகளுக்குப் பயன்படும்பொருட்டு கும்பகோணம் ஹைஸ்கூல் உபாத்தியாயராகவிருந்த மகா-ா-ா-ஸ்ரீ கே வேங்கடராமையர் அவர்கள் நல்ல தமிழில் பிரஸித்தம் செய்திருக்கின்றார்கள். இதன் விலை அணா 2. தான். இப்புத்தகத்தை ஷை ஐயரவர்களிடமிருந்து பெறுக.

நளச்சக்கரவர்த்தி நாடகம்:—நளவெண்பா, நைஷதம் என்பன வாலி பத்தில் நாம் படித்த கதை. இதுவே நளசரித்திரம். மஹாபாரதத்தில் உள்ளது. இந்தக் கதையை, தஞ்சாவூர் ஸெயின்ட் பீட்டர்ஸ் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ R. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் ஒரு நாடக ரூபமாகச் சிறுவர்கள் சிறுமிகள் இலகுவாய் வாசித்து அறியும்படியாக எளிய தமிழில் நன்றாய்ச் செய்துள்ளார். சிற்சில இடங்களில் ஸமயோசிதமாக இனிமையான பல்லவிகளும் அநுபல்லவிகளும் சரணங்களுமுள்ள கீர்த்தனங்கள் பாடப்பெற்றிருக்கின்றன. இதின் விலை அணா 4 தான். எல்லோரும் வாசிக்கத்தகுந்தது. புஸ்தகங்கள் வேண்டுவோர் ஷை ஐயரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

—————— பத்திராதிபர்.

## சமாசாரம்.

காஞ்சீபுரம் பரிஷத்:—சென்ற ஏப்பிரல்மீ 5உயில் காஞ்சிபுரத்தில் ஸம்ஸ்க்ருத வித்வான்களுடைய சபை கூடியது. சில பெரிய மநுஷ்யர்கள் முக்கியமாய் மகா-ா-ா-ஸ்ரீ Sir. S. ஸுப்ரஹ்மண்ய ஐயாவர்கள், Prof M. ரங்காசாரியர் அவர்கள், R. சுவாமிநாதையர் அவர்கள், ஹைக்கோர்ட்ஜட்ஜ் P. R. சுந்தர ஐயாவர்கள், கனந்தங்கிய P. S. சிவஸ்வாமி ஐயாவர்கள், மஹா மஹோபாத்யாயர் சந்திரசேகர சாஸ்திரிகள், வித்வான் P. B. அநந்தாசாரியர் அவர்கள், வித்வான் குமார தாதாசாரியர் அவர்கள் இன்னும் சிலரும் காஞ்சிபுரத்தில் அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றி ஆராய்ந்து ஒருவித தீர்மானம் செய்வதற்காக ஒரு வித்வத் ஸபை கூட்டி வைக்க வேண்டுமென்று பரியாலோசனை செய்வதற்காக Sir. S. சுப்பிரமணிய ஐயரவர்களுடைய கிருஹத்தில் சென்ற ஜனவரிமீ கூடினார்கள்.

விஷயங்களாவன:—

(1) ஸம்ஸ்க்ருத பாஷா அபிவிருத்தி.

(2) ஸமுத்திர யாத்திரை.

(3) ஹிந்துமதத்திலிருந்து விலகினவர்களைத் திரும்ப ஏற்றுக்கொள்ளுதல்.

(4) ஸ்திரீகளின் விவாஹ வயஸ் நிர்ணயம்.

(5) வைதிக ஆசாரங்களும் தர்ம சாஸ்திர கிரியைகளும்.

(6) தர்ம சாஸ்திரத்தில், ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய மாற்றங்கள்.

(7) நம் தேசத்து ஸம்ஸ்க்ருத வித்வான்களுக்குள் பொறுமையும் அன்பும் நேசமும் உண்டாகும்படி செய்யவேண்டிய ஸாதநங்கள்.

அதில் சென்றமீ 5 தேதி முதல் வித்வான்களுடைய மஹாஸபையாகிய பரிஷத் ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. அதன்படி சென்ற ஏப்ரல்மீ 5உயில் பல ஊர்களிலிருந்து பல வித்வான்களுள்ள பெரிய ஸபை ஒன்று கூடியது. 81 வித்வான்கள் வந்திருந்தார்கள். மைஸூர் ஸம்ஸ்தாநத்திலிருந்து மாத்திரம் 20 வித்வான்கள் இராஜாவின் அநுமதியின்பேரில் வந்திருந்தார்கள். மகா-ா-ா-ஸ்ரீ Sir S. ஸுப்ரஹ்மண்ய ஐயரவர்கள் சபையின் அக்ராஸநம் வகித்து முகவுரையாக சபையின் பிரயோஜநத்தையும் மேற்கண்ட விஷயங்களைத் தீர்மானிப்பதனால் நமது தேசத்தவர்களுக்கு உண்டாகக்கூடும் நன்மைகளைப்பற்றியும் காலதேசவர்த்தமானங்களுக்குத்தக்கபடி முற்காலத்தில் ரிஷிகள் எவ்வண்ணம் தர்ம சாஸ்திரங்களான ஸ்மிருதிகள் மூலமாய் விதி நிக்ஷேபங்களை ஏற்படுத்தி அநுஷ்டாந முறைகளை நேர்மைப்படுத்தி வந்திருக்கிறார்களோ, அவ்வண்ணமே இக்காலத்தில் வித்வான்கள், ஸபை கூடி ஆசாரங்கள் முதலானவைகளை நேர்மைப்படுத்தவேண்டுமென்பதைப்பற்றியும் பின்னும் சில விவரமாயும் உபந்யாஸம் செய்து முடித்து, கார்யங்களை ஸபையின் அக்ராஸநாதிபதியாக Prof. M. ரங்காசார்யர் அவர்களும் உதவி அக்ராஸநாதிபதியாக திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரதம உபாத்தியாயரான குப்புஸ்வாமி சாஸ்திரிகளவர்களும் இன்னும் மற்றவர்களுமிருந்து நடத்துவார்களென்று தெரிவித்து மைலாப்பூருக்குத் திரும்பிப் போய்விட்டார்கள். மகா-ா-ா-ஸ்ரீ Prof. M. ரங்காசார்யரவர்கள் பின்பு அக்ராஸநம்வகித்து ஸபையை நடத்தும் முறை சம்பந்தமான விதிகளைப் பிரஸ்தாபித்தார்கள்.

(1) இன்னார் ஸபாநாயகராகவும் இன்னார் உதவி ஸபாநாயகராகவுமிருக்கவேண்டுவது.

(2) வந்த வித்வான்களுக்குள் 36 பேர் பரிஷத்தாக ஏற்படவேண்டுவது. அவர்களுடைய பெரும்பான்மையாருடைய அபிப்ராயத்தின் மேல்தான் விஷயங்கள் தீர்மானிக்கப்படவேண்டுவது. மற்ற வித்வான்களும் லௌகிகர்களும் ஸபாநாயகரின் அநுமதியின் மேல் அவரவர்களுடைய அபிப்ராயங்களைத் தெரிவிக்கலாம்.

(3) விஷயங்களை ஆலோசிக்கும் முறை:—ஒரு வித்வான் ஒரு விஷயத்தின் ஒரு சார்புள்ள அபிப்ராயத்தை 30 நிமிஷம் உபந்யஸிக்கலாம்.

எதிர்க்கட்சி விவஹாரத்தை வேறொரு வித்வான் அதே கால அளவுக்குள் உபந்யஸிக்கலாம். இரண்டு கட்சியிலும் பேசவேண்டிய வித்வான்கள் 5 நிமிஷம் பேசலாம். அதற்கு மேற்பட்ட காலம் சபாநாயகரின் யுக்தத்தைப் பொருத்தது.

(4) விஷயத்தைப்பற்றிய விசாரணையைப் போதுமென்று எச்சமயத்திலும் அக்கிராஸனாதிபதி தீர்மானிக்கலாம்.

(5) அவசியம் ஏற்படும் பக்ஷத்தில் சபாநாயகரின் யுக்தத்தின்மேல் சபையைக் கலைத்துவிடுவதற்கு அவர்க்கு அதிகாரமுண்டு.

பரிஷத் ஆரம்பிக்கிறதற்குச் சில நாளுக்குமுன், முதல் அக்ராஸநாதிபதியும் காரியதரிசி R. ஸ்வாமிநாத ஐயரவர்களும் சில வித்வான்களும் கூடி விவாஹ சம்பந்தமாக உள்ள க்ரியைகள் மந்த்ரங்கள், க்ருஹ்ய ஸூத்ரங்கள், ஸ்மிருதிகள் முதலியவைகளை ஒருங்கு சேர்த்து பின்பு அவைகள் ப்ரத்யேகம் ப்ரத்யேகமாய் அச்சுப்போடப்பட்டு அவ்விஷயங்களைப் பேசுகிறதற்குமுன் ஒவ்வொரு வித்வானிடமும் ஓரோர் பிரதி கொடுக்கப்பட்டது. இதனால், ஸ்திரீகளின் விவாஹம் ருதுவாகிறதற்கு முன்னரா பின்னரா சாஸ்த்ரோக்தமானது என்ற விஷயமானது வ்யக்தமாக ஏற்பட்டது. முதல் நாள், அதாவது, 5-ம் தேதி இன்னாரின்னார் பரிஷத்தில் இருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. மறுநாள் 6வ பரிஷத் கூடியது.

அன்று இராத்திரி சில பண்டிதர்கள் கூடிப்பேசிக்கொண்டு பரிஷத்தின் நடைமுறையைப் பற்றி அதிருப்தியுள்ளவர்களாக இருந்தார்கள். மறுநாள் 6-ம்வ காலையில் கூடவேண்டிய காலத்தில் பரிஷத் கூடாமல், வெகுநேரங்கழித்துக் கூடியது. அப்படிக் கூடிய ஸமயத்திலும் தலைமேற்கொண்ட வேலையை ஆரம்பிக்காமல் வித்வான்களுடைய அதிருப்திக்குக் காரணம் இன்னவென்று விசாரிக்கப்பட்டது. முக்கியமாக வித்வான்கள் தாங்கள் பேசும் விஷயங்கள் உபந்யாஸங்கள் மூலமாயிருக்கக் கூடாதென்றும், விஷயங்கள் வாக்கியார்த்தங்கள் மூலமாய் பேசப்பெற வேண்டுமென்றும் வித்வான்களுடைய குறையானது இருந்தது. அவ்விதமே கடைசியில் ஒத்துக்கொள்ளப்பட்டு முதல் விஷயமாகிய ஸம்ஸ்கிருத பாஷா அபிவிருத்தியைப்பற்றிப் பேசப்பட்டது. அதைப்பற்றி 2 தீர்மானங்கள் செய்யப்பட்டன. பின்பு ஸமுத்ர யாத்திரையைப்பற்றி வாக்கியார்த்த மூலமாய் கூடுமென்று ஒருவரும், கூடாதென்று ஒருவரும் வாதம் செய்தார்கள். நெடு நேரம் நடந்தும் வாதம் முடிவுக்கு வரவில்லை. மறுநாட்காலையில் கூடினார்கள். வாக்கியார்த்த மூலமாய் வ்யவஹாரஞ் செய்வதினால் விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டு வந்திருக்கிற அநேக வித்வான்கள் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிறதற்கு

அவகாசமில்லாமற் போகிறதென்று முறையிட்டார்கள். அதின்மீது முதலில் ஏற்பாடு செய்திருக்கிறபடியே உபங்யாஸங்கள் மூலமாய் விஷயங்கள் வ்யவகரிக்கப்படலாமென்றும், வாக்கியார்த்தம் மூலமாய் வேண்டுவதில்லையென்றும் சபாநாயகர் தீர்மானம் செய்து அபிப்ராயத்தை வெளியிட்டார். இதன்மீது சில வித்வான்கள் எழுந்து ஆக்ஷேபித்தார்கள். தவிரவும், ஸபாநாயகருடன் உதவியாக 3 வித்வான்கள் நியமிக்கப்பட்டிருந்ததில் அவர்கள் மத்யஸ்தர்களாக மதிக்கப்படவேண்டுமென்று சிலரும் ஸஹாயஸ்தர்களாக மதிக்கப்படவேண்டுமென்று வேறு சிலரும் எண்ணங்கொண்டு தெரிவிக்க சபையில் பெரியகுழப்பங்கள் உண்டாயின. மேலும் ஸபாநாயகருடைய வருதிக்குட்பட்டு நடக்கத்தக்கதில்லையெனச்சில வித்வான்கள்கூட்டங்கூடிப்பேச ஆரம்பித்தார்கள். இச்சமயத்தில் சமீபத்திலிருந்த சிலபெயர்களுடன் ஆலோசனை பண்ணி சபாநாயகர் பரிஷத்தைக் கலைத்துவிட்டார்கள். பின்பு உதவி அக்ராசநாதிபதியாகிய பிரஹ்ம ஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள் ஆதியில் ஏற்பட்ட விதிகளை யநுசரித்துப் பரிஷத்தை நடத்துவதில் ஸம்மதமுள்ள வித்வான்கள் கூடி வேறு சபை நடத்தப்படும் என்று தெரிவித்தார். அதன்மீது பின்னால் வேறு ஸபையும் கூடியது. முன் நடந்த இடத்திலேயே, அதாவது ஸ்ரீ வரதராஜஸ்வாமிஸந்நிதியிலேயேநடந்தது. பின்புஎல்லாம்நேர்மையாகவும் ஒழுங்காகவும் நிகழ்ந்தது. ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் வெவ்வேறான அபிப்பிராயங்கள் பலசாஸ்திரஆதாரங்களுடனேயும் மிகசாதுர்யத்துடனேயும் புத்திசாலித்தனத்துடனேயும் தெரிவிக்கப்பட்டன. ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் முடிவில் ஸபாநாயகரும் உதவி அக்ராஸநாதிபதியும் 2 அல்லது 3 கேள்விகளைஎழுத்துமூலமாய் வியக்தமாகத் தெரிவித்து அக்கேள்விக்கடிதங்களுக்கு ‘ஓம்’ என்றும் அல்லது ‘இல்லை’ என்றும்எழுதிக் தங்கள்அபிப்ராயத்தை அவ்விதம் தெரிவிக்க வேண்டுவதாக வித்வான்களைக் கேட்டுக்கொண்டு, வித்வான்களும் அவ்விதமே செய்து தங்கள்கையொப்பங்களையும்வைத்திருக்கிறார்கள். முதல் சபைக்கு 81 பண்டிதர்கள் கூடினார்கள். பிந்திய சபைக்கு 61 பண்டிதர்கள் கூடினார்கள். பிந்திய சபையில் இரண்டு மஹா மஹோபாத்தியாயர்களும் அநேக கௌரவமான வித்வான்களும் கூட இருந்து ஸபையை உத்ஸாஹத்துடனே நடத்தினார்கள். விலகின 20 வித்வான்களில் சிலர் உயர்ந்த வித்வான்களாக இருந்தாலும் அவர்கள் விலகிவிட்டதனால் எதிர்பார்க்கக்கூடியபடி அவ்வளவு கெடுதல்கள் நேரிடவில்லை. மேற்கண்ட பரிஷத்தை ஏற்படுத்திய லௌகிக வைதிகப் பெரியோர்களின் அபிப்பிராயத்தில் இப்பரிஷத் கூடியவரையில் திருப்திகரமாகவே நடந்ததென மதிக்கப்படுகிறது. பரிஷத்தினுடைய தீர்மானங்கள் வியக்தமாக இனிப் பிரஸித்தப்படுத்தப் படுமாகையால் அவைகளை வேறொரு ஸமயத்தில் பிரஸித்தப்படுத்துவோம்.

ஆலப்பிழையில் பிரஹ்மக்ஞாநக் கிளைச்சபைகளின் கூட்டம்:—சென்ற ஏப்பிரல்மீ 6, 7வ-களில், தமிழ் மலையாள நாடுகளிலிருக்கின்ற பிரஹ்மக்ஞாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபை ஆலப்பிழையில் சநாதநதர்ம வித்தியாசாலைக்கட்டடத்தில் கூடியது. உள்ளூர் வெளியூர்களினின்று சுமார் 500 பெயர்கள் கூடினார்கள். வித்யாசாலை மண்டபம் அழகாய் சிங்காரிக்கப்பெற்றிருந்தது; அந்நபூர்ணி கிளைச்சபையின் அக்கிராஸநாதிபதி ஸ்ரீமான் எஸ். வேங்கட்டராம நாயுடு அவர்களும், கார்யதர்சிகளான, தர்மராஜஐயர் அவர்களும், இராமஸ்வாமி ஐயர் அவர்களும், இந்த மஹாசபை நேர்மையாய் நடைபெற எடுத்துக்கொண்ட முயற்சிகள் விசேஷமானவை. மிகவும் மெச்சத்தக்கவை. விருந்தினரை உபசரித்தல் மிகவும் உயர்வாகவும் திருப்திகரமாகவும் இருந்தது. வந்திருந்தவர்களின் சௌகர்யத்தையுத்தேசித்து இவர்கள் செய்திருந்த ஏற்பாடுகள் மிகவும் நன்றாய் இருந்தன. பிரஹ்மஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள் (சென்னை ஹைக்கோர்ட்டு நியாயாதிபதி அவர்கள்) இரண்டு தினமும் அக்கிராஸநம் வகித்தார்கள். அடியிற்கண்டபடி பல வித்வான்கள் உபந்நியாசம் செய்தார்கள். ஏப்பிரல்மீ 6வ-யில் நடந்த விஷயங்களாவன:—

1. அக்கிராஸநாதிபதியவர்கள் முகவுரையாக பிரஹ்மக்ஞாநசபையின் பிரகிருத நிலைமையையும், அதன் உயர்தர ஞாந முயற்சிகளையும் பற்றி விஸ்தாரமாக உரையாடினார்கள்.

2. மகா-ா-ா-ஸ்ரீ தி. இராமசந்திர ராயர் அவர்கள் 'பிரகிருத சமயத்தை'ப்பற்றியும்,

3. மகா-ா-ா-ஸ்ரீ அ. ரங்கஸ்வாமிஐயர் அவர்கள் (Government Vakil of Ramnad) மேல்நாட்டார், கீழ்நாட்டார் பிரஹ்மக்ஞாநதர்சநத்தை எவ்விதம் ஆதரிக்கிறார்கள் என்பதைப்பற்றியும், எவ்விதம் அநுஷ்டாநத்தில் கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றியும்,

4. மகா-ா-ா-ஸ்ரீ எனங்குடி ராமசந்திர நாயுடு அவர்கள், பிரஹ்மக்ஞாநசபையின் நோக்கங்களைப் பற்றியும்,

5. கும்பகோணம் டாக்டர் கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள், பிரபஞ்சத்தின் ஸ்தூல சரீரங்களின் விகாசமுறையைப் பற்றியும்,

6. மகா-ா-ா-ஸ்ரீ கே. ஜீ. சேஷையர் அவர்கள் (திருவநந்தபுரம் ஹைக்கோர்ட்டு வக்கீல்) தர்மத்தைப்பற்றியும்,

7. மகா-ா-ா-ஸ்ரீ எஸ். கல்யாணராம ஐயர் அவர்கள் (நாகர்கோவில் டிஸ்ட்ரிக்ட்டு முன்சிபு) பிரஹ்மக்ஞாநதர்சநத்தைப்பற்றியும்,

8. மகா-ா-ா-ஸ்ரீ எம். கே. வேங்கடேசுவர ஐயர் அவர்கள் ஹிந்து அவிபக்த குடும்பமும், ஈசுவர சாந்நித்தியமும் என்பதைப்பற்றியும்,

31



9. மகா-௱-௱-ஸ்ரீ ராவ் சாஹிப் எஸ். வைத்திநாத ஐயர் அவர்கள், "இனி அவதரிக்கப்போகும் லோக குருவை"ப்பற்றியும் உபந்நியாசங்கள் செய்தார்கள்.

10. மானக்குளம் மகா-௱-௱-ஸ்ரீ எம். துஞ்சுன்விராஜா அவர்கள் வீணை வாசித்தார்கள்.

11. அன்றிரவு மகா-௱-௱-ஸ்ரீ ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் அவர்கள், M.A. நந்தனர் சரித்திரத்தை வைத்துக்கொண்டு அழகாய்க் கதைபண்ணினார்கள். பின்பு,

12. மகா-௱-௱-ஸ்ரீ ப. நாராயண ஐயர் அவர்கள் மாஜிக்லாண்டிரனில் வானசாஸ்திரத்தில் முக்கியமாய் கிரகங்களின் கதிகளையும், மனிதனின் சூக்ஷ்ம சரீரங்களையும் சித்திரங்கள் மூலமாயும், புகைப்படங்கள் மூலமாயும் காட்டினார்கள்.

ஏப்ரில்௴ 7௳

13. மகா-௱-௱-ஸ்ரீ வி. கே. தேசிகாசாரியர் அவர்கள்,(Sub-Judge) பிரபத்தியைப்பற்றியும்,

14. மகா-௱-௱-ஸ்ரீ வி. ராமசந்திர ஐயர் அவர்கள் (Govt. Vakil, Madura) பிரஹ்மஞான சபைகள் ஞான ஆலயங்களாகவும் சாந்தாலயங்களாகவும் இருப்பதைப்பற்றியும்,

15. மகா-௱-௱-ஸ்ரீ பெரியகுளம் சுந்தரராஜ ஐயர் அவர்கள் "பிரஹ்மஞானசபை, அதன் சாதுயங்கள்" என்பதைப்பற்றியும்,

16. மகா-௱-௱-ஸ்ரீ எல். சுப்பிரமணிய ஐயர் அவர்கள், "மனிதனின் லக்ஷ்யத்தைப்பற்றியும்,"

17. மகா-௱-௱-ஸ்ரீ ப. நாராயண ஐயர் அவர்கள், "உத்ஸவங்களும் அவைகளின் தத்வார்த்தங்களும்" என்பதைப்பற்றியும்,

18. மகா-௱-௱-ஸ்ரீ கும்பகோணம் S. V. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் "பிரஹ்மஞான தர்சநத்தை, பாலர்களுக்கு எவ்விதம் உபயோகம் செய்தல்கூடும் என்பதைப்பற்றியும்"

19. மகா-௱-௱-ஸ்ரீ ஈச்சங்குடி டி. எஸ். லக்ஷ்மீநாராயண ஐயர் அவர்கள் "ஸ்ரீகிருஷ்ணபகவானின் பாலலீலைகளின் தத்துவங்களை"ப்பற்றியும்,

20. மகா-௱-௱-ஸ்ரீ மாஞ்சேரி எஸ். ராமஐயர் அவர்கள் (ஹைக்கோர்ட்டு வக்கீல்) "பிரஹ்மஞானதர்சநத்தைப் பரவச்செய்யுமுறையில் நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய பிரயத்தனங்களை"ப்பற்றியும், உபந்நியாஸம் செய்தார்கள். அன்று இரவு, சநாதநதர்ம வித்தியாசாலை மாணவர்கள், மகிழ்ங்களிக்கும்படியாக நாடகம் ஆடினார்கள். எல்லா விஷயங்களும் யாதொரு விக்கமுமின்றி இறைவன் அருளால் சுககரமாய் நடைபெற்றன. வருகிற ஃபெடரேஷன், கோச்சி ஸம்ஸ்தானம், திருச்சூரில் கூடி நடைபெறும்.

**சிருங்ககிரிமடமும் அடுத்தவார்சு நியமநமும் அவர்களின் பட்டாபிஷேகமும்:**—காலஞ்சென்ற மஹாஸ்வாமிகள் தாம் ஜீவந்தராயிருக்குங் காலத்திலேயே பிரஹ்மஸ்ரீ கோபிசாஸ்திரிகள் அவர்களின் புத்திரரான 19 வயதுள்ள நருஸிம்ஹ சாஸ்திரிகள் என்பவர்களைத் தமக்கு அடுத்த வார்சாகக் குறிப்பிட்டிருந்தனர். மைசூர் மஹாராஜா அவர்களின் அநுமதியுடனுந் தான் சிருங்ககிரி மடத்திற்கு வார்சு ஏற்படுத்துவது வழக்கம். அதனால் முன் மஹா சுவாமிகள் விதேஹ முக்திக்கு 3 தினங்களுக்குமுன், குறிப்பிடப்பட்ட பிரஹ்மசாரியின் பிதாவின் சம்மதமும், மஹாராஜாவின் அநுமதியும் பெற்று அதன்மீது அந்த பிரஹ்மசாரியை அழைத்துக்கொண்டு வரும்படியாக மஹாஸ்வாமிகள் ஒருவரை ஆக்ஞாபித்து அவர் சிருங்ககிரியிலிருந்து அனுப்பப்பட்டார். அவ்விதம் காரியங்களை முடித்து, குறித்த பிரஹ்மசாரியை அழைத்துக்கொண்டு மோட்டார் வண்டியில் திரும்பிவந்த ஒரு தினத்திற்கு முன், சுவாமிகளின் விதேஹமுக்தி ஏற்பட்டது. அதனால், மஹாஸ்வாமிகளே, வார்சை நேரில் நியமிப்பதற்கு தடங்கல் நேரிட்டது, மஹாஸ்வாமிகளின் பிந்திய கார்யங்களெல்லாம் முடிந்தமேல் ஸ்ரீகண்டசாஸ்திரிகள் திரும்பவும் மைசூருக்குச் சென்று, மஹாராஜா அவர்களிடம் பட்வாப்பெற்றுக்கொண்டு, பின்பு பிரஹ்மஸ்ரீ நரஸிம்ஹ சாஸ்திரிகள்என்ற பூர்வ ஆச்ரமப் பெயருள்ளவர்களுக்கு ஸ்ரீ சந்திரசேகர பாரதிஎன்ற நாமதேயத்துடன் சென்ற ஏப்பிரல்மீ 7உ ஆசார்ய அபிஷேகம் செய்யப்பட்டது. ஷை மாதம் 8உ வெகு ஆடம்பரத்துடனே சிருங்ககிரியில் ஊர்வலமும் நடந்தேறியது. ஷை அத்வைத ஆதீநத்திற்கு பிரகிருத ஸ்வாமிகள் அதிக சிரேயஸ்ஸை உண்டுபண்ணுவார்களென மடத்தின் பக்த கோடிகள் நம்புகிறார்கள். அப்படியே ஈசுவரன் அருள்புரிவாராக.

---

**"டைடானிக்" என்ற நீராவிக்கப்பலின்விபத்து:**—நியூபவுண்டுலாண்டு என்ற தீவுக்குசமீபத்தில் சென்றமீ 14உயில் இப்பெயர்கொண்ட ஒருபெரிய நீராவிக்கப்பல், அட்டிலாண்டிக்ஸமுத்திரத்தில்முதல்முதலில்வெள்ளோட்டமாக தான்செய்தயாத்திரையில் பனிக்கட்டிமலையில் (Iceberg) மோத, அடிவாரத்தில் துவாரம்ஏற்பட, ஜலமும் பனிக்கட்டிகளும் உள்ளேபுகுந்து, நடுசமுத்திரத்தில் நடுராத்திரியில்ஆழ்ந்துபோயிற்று. இது 900 அடிநீளமும், 90அடி அகலமும், 46,328 டன் நிறையுமுள்ள மிகப்பெரியநீராவிக்கப்பல். இது 15 லக்ஷம் பவுன் செலவின்மேல் கட்டப்பட்டது. இது பிரயாணிகளையேற்றும் கப்பல். 3,500 பெயர்களைக் கொள்ளக்கூடியது. சுமார் 2,340 பெயர்கள் இக்கப்பலில்யாத்திரைக்காரர்கள் ஏறியிருந்தார்கள். தந்தியில்லா மின்சார உபாயத்தால் (Wireless Telegraphy) அக்கப்பலுக்கு நேர்ந்திருக்கிற ஆபத்தை, மாலுமிகள் வெளியில் தெரிவித்தார்கள். அந்த மின்சார சமாசாரம்

அதற்கு சமீபதூரத்தில் சென்று கொண்டிருந்த "கார் பேத்தியா" என்னும் நீராவிக்கப்பலை எட்டியது. உடனே அக்கப்பல் இந்த ஆபத்துக்குட்பட்ட கப்பலை சமீபித்தது. ஆபத்துக்குட்பட்ட கப்பலுக்கு, 990 பெயர்கள் தான் உயிர்தப்பிப் போகும்படியாக, (Life-boats) உயிர்தப்ப உதவும் சிறு படகுகள் இருந்தன. இவைகளின் உதவியால் 745 பெயர்கள் தான் தப்பி, கார் பேத்தியா கப்பலை நாடி உயிர் தப்பினர்கள். மீதமான 1,595 ஜனங்கள் சமுத்திரத்தில் மூழ்கி மாண்டார்கள். இதில் பல தேசத்தார்கள் இருந்தார்கள். பெரும்பான்மையோர் ஆங்கில நாட்டைச் சேர்ந்தவர்கள். இது மிகவும் துக்ககரமான ஸம்பவம். இந்த விபத்தின் விவரணங்கள் திநப்பத்திரிகைகளில் வரையப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பார்க்க கல்நெஞ்சும் கரையும். புருஷனை விட்டுப் பிரிய மநமில்லாத எத்தனையோ உத்தமிகள் புருஷனுடன் நீரில் ஒருங்கே மூழ்கினார்கள். புருஷனைப் பிரிந்த ஸ்திரீகள், ஸ்திரீகளை விட்டுப் பிரிந்த புருஷர்கள், மக்களை விட்டுப்பிரிந்த பெற்றோர்கள் எத்தனைபெயர்கள் இவ்விதம் மாண்டார்கள்! இவ்விதமாக ஒருஸமயத்தில் நேரிடும் மரணம் மிகவும் வியக்கத்தக்கது. ஒரே சமயத்தில் மரணமடைய இவர்கள் ஒருங்கே முன் ஜன்மத்தில் செய்த தீவினை யாதோ? இக்கப்பல் பலமாய்க் கட்டப்பட்டிருந்தது. இது நவீநமான உபாயங்களும், புத்திசாதுர்யமான யந்திரங்களும் அமைக்கப்பெற்றிருந்தும், பார்க்கவும், கேட்கவும் சொற்ப காரணத்தாலான விபத்தாக இருந்தும், இவ்வித விசனகரமான ஸம்பவம் நேரிட்டிருக்கிறது. எல்லாம் ஈசன்செயல். அவருடைய சங்கற்பம் எதுவோ அதை மனிதன் அறிகிலன்.

---

உயர்ந்த ஓர் உத்தமர் மரணம்:—மேற்கண்ட டைடானிக் கப்பலின் விபத்தில் மரணமடைந்தவர்களில் ஸ்ரீமான் ஸ்டேட்டு என்பார் ஒருவராகத் தெரியவருகிறது. தப்பிப் பிழைத்துக் கரையேறியவர்களின் விவர ஜாப்தாவில் அவர் பெயரைக் காணோம். இவர் மரணம் மிகவும் துக்ககரமானது. இவர் ரிவியூ ஆப் ரிவியூஸ் (Review of Reviews) என்னும் மாதாந்த பத்திரிகையின் அதிபர். இவர் உயர்தர சீலமுள்ள அறிஞர். இவர் அகன்ற அறிவுடையவர், இளகிய ஹிருதயத்தினர். வெள்ளையன், கருத்தவன் என்ற பேதங்களைக் கருதாமல், எல்லா ஜாதியாரிடமும் அன்பும் ஆதரவுமுள்ளவர். நடுநிலைமை வழுவாச் சிந்தையுள்ள சிலர் இவர். நம்மிந்தியா தேசத்தின் யோகக்ஷேமத்தைப்பற்றி மிகவும் ஆதரவுடனே அடிக்கடி பத்திரிகை வாயிலாக எழுதுவர். உலகத்தில் மஹா செல்வாக்குள்ளவர். நீதிமுறையும், தர்மமுறையும் உலகத்தில் நிலைநிற்க வேண்டுமென்பதில் அதிகமாகப் பாடுபட்டவர். ஹேக் (Hague) என்னும் நகரில்

ராஜாங்கத்தார்களுக்குள் சண்டைகள் நிகழாமல், அவர்களுடைய விவகாரங்களை சமாதானமாய்த் தீர்த்துக்கொள்ள வேண்டியதற்காக ராஜாங்கங்களின் ஸமூகத்தின் மத்யஸ்தர்களின் நியாயஸ்தலம் (International Court of Arbitration) என்பதை ஸ்தாபிக்கும் விஷயத்தில் மிகவும் முயற்சிசெய்தார். மனிதவர்க்கத்தினரின் பொதுவான க்ஷேமங்களை விருத்தி பண்ணுவதில் எப்போதும் கருத்துள்ளவர். அவர் மரணத்தால், நாலு கண்டத்திலுமுள்ள மனித வர்க்கத்தினர் நலமமர்ந்த நண்பரை இழந்திருக்கிறார்கள். மரணகாலத்தில், அவர் வயது 62.

---

சென்றமீ 20, 21உ தஞ்சாவூர்ஜில்லாவிலுள்ள பிரஹ்மக்ஞானக் கிளைச் சங்கங்களின் மஹாசபை காரைக்காலில் நடந்தது. மகா-ா-ா-ஸ்ரீ T. S. லக்ஷ்மீ நாராயண ஐயரவர்கள் அக்ராஸநம் வகித்தார் தமிழிலும், ஆங்கிலத்திலும், பிரென்சு பாஷையிலும் உபந்யாஸங்கள் நிகழ்ந்தன. அநேக அறிஞர்கள் கூடினார்கள். எல்லாம் திருப்தியாக நடைபெற்றது.

---

**சங்கரஜயந்தி தினம்:**—மதுரையில் சென்றமீ 21உ ஞாயிற்றுக்கிழமை ஸாயங்காலம் 7 மணிக்கு தர்மசாஸ்திர சபையில் ஸ்ரீ சங்கரஜயந்தி விமரிசையாய் நடைபெற்றது. ஸ்ரீ மீநாக்ஷீ சுந்தரேசுவரர்கள் கோவிலிலுள்ள ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி விக்ரஹத்திற்கு காலையில் அபிஷேகதீபாராதனையும் சாயங்காலத்தில் சபைமண்டபத்தில் உபநிஷத் பாராயணமும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திஸ்தோத்ரமும்,ஆசார்யர்களுடைய அவதாரத்தின் மஹிமையைப்பற்றிய உபந்யாஸங்களும் நடத்தப்பட்டன. பழம்,தாம்பூலம்,சந்தநம்,புஷ்பம் விநியோகிக்கப்பட்டன. சபைவித்வான்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒருஜோடி வஸ்திரம் கொடுக்கப்பட்டது. வேதபாராயணம் செய்த மற்றவர்களுக்கு ஸம்பாவனை செய்யப்பட்டது.

---

**வெண்தாமரை நாள்:**—சென்றமீ 8உ வெண்தாமரைநாள் வழக்கம் போல மதுரை பிரஹ்மக்ஞாந மந்திரத்தில் கொண்டாடப்பட்டது. ஏழைகளுக்கு அந்நம் திருப்தியாக அளிக்கப்பட்டது. பிரஹ்மக்ஞாந தர்சநத்தைப்பற்றியும் ஸபையின் ஸ்தாபகர்களைப் பற்றியும் ஸபையைப்பற்றியும் உபந்யாஸங்கள் நிகழ்ந்தன. பகவத்கீதையினின்றும், Light of Asia, தேவாரம் திருவாசகம் திருவாய்மொழியினின்றும் பாசுரங்கள் வாசிக்கப்பட்டன. எல்லாக் கார்யங்களும் வந்தவர்கள் மநத்தில் ஞாந எழுச்சி உண்டாகும்படி நேர்மையாய் நடைபெற்றன.

பத்திராதிபர்.

தேயு என்றால் நாஸித்துவாரத்தின் மேற்பக்கத்தைத் தழுவிச் செல்லும் சுவாஸம்.

வாயு என்றால் நாஸித்துவாரத்தின் கீழ்பாகத்தைஒட்டிச் செல்லும் சுவாஸம்.

ஆகாசம் என்றால் துவாரமுழுவதையும் தழுவிச் செல்லும் சுவாஸம்.

இவைகளைப்பற்றி இன்னும் மற்ற விவரங்களை அகஸ்தியர் சர சாஸ்திரத்தில் கண்டுகொள்க. சுவாஸகதியின் மாத்திரை விவரங்களை ஹடயோக பிரதீபிகை முதலிய சாஸ்திரங்களிற் கண்டு கொள்க.

51. வாஹ்யாப்யந்தரவிஷயாக்ஷேபீ சதுர்த:॥

நான்காவது, (ரேசகம், பூரகம், கும்பகம் இவைகள் நீங்கலான) வெளி (ரேசகம்) உள் (பூரகம்) விஷயங்களின்றி சம்பவிக்கிறது.

குறிப்பு:—ஸாதாரண அப்பியாஸி கும்பகம் பண்ணுதல், ரேசக பூரகங்களின் சம்பந்தத்துடன் நிகழ்வது. இதில் பிரஸ்தாபிக்கப்படுவது கேவல கும்பகம். அதாவது ரேசக பூரகங்களின்றி, நினைத்தமாத்திரத்தில் செய்தலாம். இது உயர்தர நிலையாம்.

52. ததஃ க்ஷீயதே ப்ரகாஶாவரணம்॥

அதனால் (பிராணயாமத்தினால்) பிரகாசத்தை (புத்தியின் தெளிவை) மறைக்கிற திரையானது வரவர நீங்குகிறது.

குறிப்பு:—(1) பிராணயாமம் செய்துவருகின்ற யோகியின் புத்தியை மறைக்கிற ஆவரண ரூபமான கர்மமானது வரவரக் குறைவுபடுகிறது. கர்மமானது புத்தியில் ராகத்தை அதிகப்படுத்தி, புத்தியின் ஸத்வகுணத்தை மறைத்து, விஷயாதிகளில் பிரவிர்த்திக்கும்படி செய்கிறது. அதனால், புத்தியின் பிரகாசம் (தெளிவு) குறைகிறது. இதுவே இங்கு ஆவரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முறைப்படி பிராணயாமம் செய்வதினால், இந்த ஆவரணம் வர வர நீங்கி, புத்தி பிரகாசத்தைப் பெறுகிறது.

“பிராணாயாமத்தைவிட உயர்ந்த தபஸ் வேறில்லை. அதனால் சித்த சுத்தி உண்டாகும். அதனால் ஞானப்பிரகாசம் ஏற்படும்.”

—பஞ்சசிகாசாரியர்.

(2) எல்லாப் பாபங்களுக்கும் பிராணாயாமம் பிராயச்சித்தமாக விதிக்கப்பெற்றிருக்கிறது. அது சரீரம், இந்திரியங்கள், மனம் இவைகளிலுள்ள தோஷங்களை விலக்கும். எல்லாப் பிராயச்சித்தங்களிலும் பிராணாயாமம் உயர்ந்தது. மற்றைய பிராயச்சித்தங்கள், சரீரம், இந்திரியங்கள் இவைகளைச் சுத்தம் செய்யும். அவைகளின் பயனாக, மனம் சுத்தம்பெறும். பிராணாயாமமோ, மனத்தை நேராகச் சுத்தம் செய்யும் இயல்பினது. ஈசுவர ஸாக்ஷாத்காரத்தையும் உண்டுபண்ணும்.*

53. 𑌧𑌾𑌰𑌣𑌾𑌸𑍁 𑌚 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌮𑌨𑌸𑌃॥

(பிராணாயாமத்தினால் ஆவரணம் நீங்கவே) மனத்திற்கு தாரணையின் தகைமை உண்டாகிறது.

குறிப்பு:—மனத்தை ஒரு இடத்தில் நிறுத்தல் தாரணையாம். விபூதி பாதம் முதல் சூத்திரத்தில் இதன் விவரம் சொல்லப்பட்டிருக்கிறது.

---

*ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே.

புள்ளினு மிக்க புரவியை மேற்கொண்டாற்
கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கு
முள்ளது சொன்னோ முணர்வுடை யோருக்கே.

பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப் பிறப்பில்லை
பிராணன் மடைமாறி பேச்சறி வித்துப்
பிராண னடைபேறு பெற்றுண் டீர்நீரே.

மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே.—திருமந்திரம்.

54. 𑌸𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌾𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍇 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌨𑍁𑌕𑌾𑌰
𑌇𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌃॥

பிரத்யாஹாரம் என்பது, இந்திரியங்கள் விஷயங்களுடன் சம்பந்தமில்லாமல் சித்தத்தினுடைய தன்மையை அநுசரிப்பது போல இருத்தலாம்.

குறிப்பு:—(1) பிராணுயாம அப்பியாஸத்தால் ஆவரணம் பொய்த்துப்போய், மநம் வைராக்யம் பெற்று புருஷ ஸாக்ஷாத்காரத்தை நோக்கி அபிவிருத்தியுள்ளதாக ஆகின்றது. அந்நிலையில் இந்திரியங்கள் விஷயங்களுடன் சம்பந்திக்காமல் மநத்தையே அநுஸரிக்கின்றன. பிரத்தியாஹாரம்: பிரதி= பிரதிலோமமாக, எதிரிடையாக, ஆஹாரம் = பிரவிர்த்திக்கும்படி செய்தல். அதாவது இந்திரியங்களை விஷய சம்பந்தங்களினின்று பெயர்த்து, அதற்கெதிரிடையாக மநத்துடன் பொருந்தும்படி செய்தல்.

(2) இந்திரியங்களின் சுபாவம் விஷயங்களுடன் சம்பந்தித்தல். அச்சம்பந்தத்தை நீக்கினுல், ஸத்துவத்துடன் சம்பந்திக்கும் யோக்யதையின்றி ஜடமாக இருக்கின்றமையால் மநத்துடன் சம்பந்தப்பட்டது போல் (இவ) என்ற பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. மநத்திற்கு சத்துவத்தைக் கிரஹிக்கும் யோக்யதை உண்டு.

(3) இராணித் தேனீயானது வெளிக்கிளம்ப, மற்றைத் தேனீக்கள் வெளிக்கிளம்புமாறு போல, மநம் வெளியேற இந்திரியங்கள் அதைத் தொடர்கின்றன.

55. 𑌤𑌤𑌃 𑌪𑌰𑌮𑌾 𑌵𑌶𑍍𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌮𑍍॥

அதனுல் (பிரத்யாஹாரத்தால்) இந்திரியங்கள் பூர்ணமாய் வசப்பட்டிருக்கும் தன்மை உண்டாகிறது.

குறிப்பு:—(1) வசப்படுதல், பூர்ணமாய் (பரமமாய்) வசப்படுதல் இவை இரண்டிற்கும் வித்யாஸமுண்டு. சப்த முதலிய விஷயங்களை ராகத் துவேஷமின்றி அநுபவித்தல் இந்திரிய ஜயம் என்கிறார்கள் சிலர்.

(2) சாஸ்த்ரங்களில் நிஷேதிக்கப்படாத விஷயங்களை அநுபவித்தல் இந்திரிய ஜயம் என்கிறார்கள் வேறு சிலர்.

(3) விஷயங்களின் வசமாகாமல் ஸ்வேச்சையாக அவைகளை அநுபவித்தல் என்கிறார்கள் மற்றும் சிலர்.

(4) ராகத் துவேஷமில்லாமலும், அவைகளின் பயனாகிய ஸுகதுக்கங்களில்லாமலும் தடஸ்தனாக இருந்து விஷயங்களை அநுபவித்தல் இந்திரிய ஜயம் என்கிறார்கள் இன்னும் சிலர்.

(5) ஏகாக்ரதை பெற்ற மநத்துடன் இந்திரியங்கள் ஒருமைப்பட்டபடியால், விஷயங்கள் முன்னிருந்தாலும் அவைகளைக் கிரகிக்காமலிருத்தல் இந்திரிய ஜயம் என்கிறார் ஜைகீஷவ்ய மஹரிஷி.

(6) இந்த ஐந்தாம் அபிப்பிராயத்தைத் தான் பூர்ணமாய் (பரமமாய்) இந்திரியங்களை வசப்படுத்தல் என்கிறார் பகவான் பதஞ்சலியாரும். ஒரு இந்திரியத்தை ஜயித்தால் மற்றைய இந்திரியங்களின் ஜயம் ஏற்படுகிறதில்லை. மநமானது அந்தர்முகப்பட்டு விஷயங்களின் சம்பந்தமின்றி நிரோதம் பெறுங்காலத்தில் எல்லா இந்திரியங்களின் ஜயமும் உண்டாகிறது. இதுதான் பரமாவசியம் என மூலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

(7) இந்த பாதத்தில் i. கிரியாயோகம் ii. கிலேசங்கள் iii. கர்மங்களின் பரிபாகம், விபாகங்கள் iv. அவைகளின் பயனான ஹேயம் (துக்கம்) v. துக்கம், துக்கத்தின் காரணம், அதன் நிவிர்த்தி உபாயம், அதன் நிவிர்த்தி ஆன நிலை, அதாவது கைவல்யம் இவைகளைப்பற்றிச் சொல்லியிருக்கின்றது.

யமம் முதலிய யோக அஷ்டாங்கங்களில் யமம், நியமம், ஆஸநம், பிராணாயாமம், பிரத்யாஹாரம் என்ற ஐந்து பஹிரங்க ஸாதநங்களும் இந்த பாதத்திலும், தாரணை, தியாநம், ஸமாதி அடுத்த பாதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸாதநபாதம் முற்றிற்று.

பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்.

## 3-வது விபூதிபாதம்.*

1. தேசபந்தச்சித்தஸ்ய தாரணா॥

**தாரணை என்பது மனத்தை (ஒரு குறித்த) இடத்தில் கட்டுதலாம்.**

குறிப்பு:—(1) மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், நாபிசக்ரம், ஹிருதய புண்டரீகம், பிரஹ்மரந்த்ர ஜ்யோதிஸ், புருவமத்யம், நாஸிநுனி, உள்நாக்கின் நுனி, சரீரத்தில் இவைபோன்ற இடங்களிலாவது அல்லது வெளியிலுள்ள விஷயங்களிலாவது, மனோவிர்த்தியை நிறுத்தல், ஒரே விர்த்தியில் நிற்கும்படி மனத்தைக் கட்டுதல் தாரணை எனப்படும். அடியிற்கண்ட திருமந்திர வசனம் கவனிக்கத்தக்கது.

> சோணு மனத்தைக் குறிகொண்டு கீழ்க்கட்டி
> வீணுத்தண் டேடே வெளியுறத் தானோக்கிக்
> காணுக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
> வாணு ளடைக்கும் வழியது வாமே.

(2) பிராணயாமத்தினல் வாயுவையும், பிரத்யாஹாரத்தினல் இந்திரியங்களையும் ஜயித்து மனத்தை ஒரு இடத்தில் நிறுத்த முயலவேண்டும். முதலில் பகவானுக்கு எல்லாக் கல்யாணகுணங்களுடன் கூடியவும் பல ஆபரணங்களுடையவுமான ஸ்வரூபத்தைக் கற்பித்து, அதில் நிற்கும் திறமைபெற்ற பின்பு அந்தக் கற்பித்த ஸ்வரூபத்தினின்று ஒவ்வொரு ஆபரணத்தின் குணத்தை ஒன்றின்பின் ஒன்றாய்த் தள்ளி, அந்தந்த ஆபரணமின்றியும் அந்தந்தத் தனித்தனி குணமின்றியுமுள்ள ஸ்வரூபத்தில் மனத்தை நிறுத்த வேண்டும். பின்பு அந்த ஸ்வரூபத்திலும் பல அவயவங்களையும் தள்ளி, நேதிபண்ணிக்கொண்டேபோக, ஒரு நிலையில் ஜ்யோதிஸை யோகியானவன் காண்பான், அதில் மனம் நிற்கும்படி செய்யவே பின்பு அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் எல்லாம்

* ஸம்யமம் என்னப்படும் தாரணை முதலிய அந்தரங்க ஸாதனங்களையும் அவைகளால் பெறக்கூடிய சித்திகளையும் இந்த அத்தியாயத்தில் பகவான் பதஞ்சலியார் சொல்லுகின்றார்.

ஒன்றுரும் நிலை சித்திக்கும். அதுவே நிர்விகல்ப ஸமாதி.* ஸ்ரீமாணிக்கவாசகரின் அடியில் வரும் பாசுரம் இங்கு கவனிக்கத்தக்கது.

இன்றெனக்கருளி இருள் கடிந்து
உள்ளத்திலெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிரிது மற்றின்மை.

இது பஹிஷ்பிரபஞ்ச லயசிந்தனையைச் சொல்லுகின்றது.

(3) "நேதி" பண்ணிக்கொண்டு போகும் முறை தன் சம்பந்தமாகவும் வெளிப்பிரபஞ்சம் சம்பந்தமாகவும் நிகழும். அதைத்தான் தன் (யோகியின்) சரீர சம்பந்தமான சுக்ரங்கள் என்றும், வெளிப்பிரபஞ்ச சம்பந்தமாக வெளி விஷயங்கள் என்றும் குறிப்பு 1-வது பாராவில் சொல்லப்பட்டுள்ளது. இந்த இரண்டுவித முறைகளைத்தான் கடோபநிஷத்தின் அடியிற் குறிப்பிட்ட மந்திரங்கள் உபதேசிக்கின்றன.

3-ம் வல்லி 10, 11 மந்திரங்கள் பஹிஷ்பிரபஞ்ச லய சிந்தனையையும், 6-ம் வல்லி 7, 8 மந்திரங்கள் ஆந்தரப்பிரபஞ்சமாகிய உள்நோக்கிய லய சிந்தனையையுமாம் என்று அறிக.

2. தத்ர ப்ரத்யயைகதாநதா த்யாநம்॥

அதில் (அவ்விதம் மநம் ஒரு இடத்தில் கட்டுண்டு இருப்பதில்) மநம் ஒரே விர்த்திரூபமாக இருந்தல் தியாநமாம்.

குறிப்பு:—(1) தியாநிக்கப்படும் வஸ்துவில் பிரவாகம்போல இடையறாது மநத்தை இருக்கும்படி செய்தல் தியாநம்.

(2) விஷ்ணு புராணத்தில் கேசித்வஜனுக்கும் காண்டிக ஜநகருக்கும் நடந்த ஸம்வாதத்தில் பின்வரும் விஷயமுள்ளது.

---

* அரித்த வுடலையம் பூதத்தில் வைத்துப்
பொருத்தவைம் பூதஞ்சித் தாதியிற் போந்து
தெரித்த மனாதிசத் தாதியிற் செல்ல
தரித்தது தாரணை தற்பரத் தோடே.—திருமந்திரம்.

பலவாறான விர்த்திகளைத் தள்ளி ஒரு லக்ஷ்யத்தில் நிகழும் ஏகரூபமான விர்த்திப் பிரவாகம் தியானமாகும். முற்கூறிய யமம் முதலிய அங்கங்கள் ஸ்திரப்பட்டால் தான் புத்தி ஏகாக்ரதை பெற்று தியானத்திற்கு யோக்யமாக அமையும்.

(3) பிரத்யாஹாரம் = இந்திரியங்களை ஜயித்தல். தாரணை = ஒரு லக்ஷ்யத்தில் சொற்ப காலம் மநத்தை நிறுத்தல். தியாநம் என்பது ஒரு லக்ஷ்யத்தில் மநத்தை தீர்க்ககாலம் நிறுத்தல். ஸமாதி, தான் நினைத்தபடி 10 நாள், ஒரு மாதம், ஒரு வருஷம் மநத்தை நிறுத்தல். இவ்வாறாக விக்ஞாநபிக்ஷு என்பாரின் அபிப்பிராயம்.

(4) தியாநம் பயன்பட வேண்டுமானால், குறித்த காலம், குறித்த இடம், நியமித்த முறை இவை மாறாமல் நிரந்தரம் நேர்மையாய்ச் செய்தல் வேண்டும். ஒருநாள் ஒரு இடத்திலும் ஒரு காலத்திலும் ஒரு முறையாகவும் மறுநாள் இவைகளை மாற்றுதலும் அல்லது தியாநம் செய்யாமல் இருத்தலும், வேறு ஒரு நாள் சாவகாசம் அதிகம் உளது என எண்ணி அதிக காலம் தியானித்தலும் பயன்படாவாம். ஆனால் தியாநம் நிகழும் காலத்தைச் சிறுகச் சிறுக அதிகப்படுத்திக்கொண்டு போதல் நலம் தரும்.

3. 𑌤𑌦𑍇𑌵𑌾𑌰𑍍𑌥𑌮𑌾𑌤𑍍𑌰𑌨𑌿𑌰𑍍𑌭𑌾𑌸𑌂
𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌶𑍂𑌨𑍍𑌯𑌮𑌿𑌵 𑌸𑌮𑌾𑌧𑌿𑌃॥

அந்த தியாநமே, வஸ்து ஸ்வரூபமாக மாத்திரம் தோன்றுவதாயும் தியாநம் தியாநிக்கிறவன் என்ற இரண்டின் ஸ்வரூபமும் இல்லாதபோலிருப்பதாயும் நிகழ்கின்ற மநத்தின் நிலையில் ஸமாதி எனப் பெயர் பெறும்.

குறிப்பு:—(1) ஸ்வரூப சூந்யம்போல் : தியாநம்; தியாநிக்கிறவன் என்ற ஸ்வரூபங்கள் உள்ளன. அவை அழியவில்லை. ஆனால் அவைகளின் அறிவு இன்றும் என்பது கருத்து. நிர்மலமான ஸ்படிகம், அதன் சமீபத்தில் உள்ள செம்பருத்திப்புஷ்பத்தின் ரூபமாக அதாவது நிறமாகத் தோன்றுவது போல, நிர்மலமான மநம் அது இலக்ஷிக்கிற வஸ்து ரூபமாக இருப்பதாகத் தோன்றலாம்.

(2) தாரணையில் பல விஷயங்களைத் தவிர்த்து, ஒரு வஸ்துவில் மநம் கட்டப்படுகிறது. தியாநம், ஒரே வஸ்துவை திரிபுடியுடன் சிந்தித்தல். ஸமாதி திரிபுடி அற்று த்யேய ரூபமாக (வஸ்துரூபமாக) மநம் ஆகுதலாம். அந்நிலையில் தீர்க்க காலம் மநம் இருத்தல் ஸம்ப்ரக்ஞாத ஸமாதி. த்யேய வஸ்துவின் ஞாநம் கூட இல்லாமல் வெகுகாலம் மநம் இருத்தல் அஸம்ப்ரக்ஞாத ஸமாதியாம். இவ்விதமான தாரதம்யங்கள் அறியத்தக்கன.*

4. த்ரயமேகத்ர ஸம்யம:॥

மேற்கண்ட மூன்றும் (தாரணை, தியாநம், ஸமாதி) ஒருங்காக ஸம்யமம் என்று சொல்லப்பெறும்.

குறிப்பு:—ஸம்யமம் = மநத்தை நன்றாய் அடக்குதல்.

5. தஜ்ஜயாத் ப்ரஜ்ஞாலோக:॥

அதை (ஸம்யமத்தை) ஜயிப்பதால் பிரக்ஞைக்குப் பிரகாசம் உண்டாகிறது.

குறிப்பு:—எவ்வளவுக் கெவ்வளவு ஸம்யமம் ஸ்திரப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பிராந்தி ஸம்சயங்கள் நிவிர்த்தியாகி ஸமாதி பிரக்ஞை நிர்மலமாகிறது.

6. தஸ்ய பூமிஷு விநியோக:॥

அந்த ஸம்யமமானது (உயர்) பூமிகளில் (ஏறுவதற்கு) பிரயோஜநமானது.

---

* மன்மனம் எங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே.

என்ற திருமந்திரம் இங்கு கவனிக்கத்தக்கது.

# புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.



| | |
|---|---|
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |
| கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| சுவேதா சுவதரோபநிஷத் | 0-3-0 |
| ஐதரேயோபநிஷத் ஷை | 0-2-0 |
| மௌநவாக்கு | 0-2-0 |
| சந்மார்க்கதீபம் | 0-2-0 |
| ஈசோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-1-0 |
| அக்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்) | 0-1-0 |
| டில்லிதர்பார் மஹோத்ஸவம் | 0-1-0 |
| வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின்சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | 0-1-0 |
| வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம் | 0-0-6 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்) | 0-0-3 |
| சிராத்தம் | 0-0-3 |
| சந்மார்க்க சபையை நடத்தும் முறை | 0-0-3 |
| பிரஹ்மஞாந சபையின் யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| அஷ்டமி பிரதக்ஷிணம் | 0-0-1 |
| பிரஹ்மஞாந சபை | 0-0-1 |
| தசாவதாரங்களின் உண்மை | 0-0-3 |
| மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும் | 0-0-3 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற் கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி பிரெசிடெண்டு ப. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

# ADVERTISEMENT.

## மறந்துவிடாதீர்கள்.

அநேக பொன் வெள்ளி பதக்கங்களும் நற்சாக்ஷிபத்திரங்களும் பெற்றவர்கள்

புதிய சரக்குகள்! —————— புதிய மாதிரிகள்!!

பிடித்தமில்லாத தினுசுகளை வாபஸ் பெற்றுக்கொள்வோம்.

### நாகரிகமான வெண்பட்டு வேஷ்டிகள்.

| முழம் நீளம் | முழம் அகலம் | ரூ | அ | முழம் நீளம் | முழம் அகலம் | ரூ | அ |
|---|---|---|---|---|---|---|---|
| 6 ,, | $2\frac{1}{2}$ ,, | 6 | 8 | 10 ,, | 3 ,, | 13 | 0 |
| 6 ,, | 3 ,, | 9 | 0 | 4 ,, | $1\frac{3}{4}$ ,, | 4 | 0 |
| 7 ,, | 3 ,, | 10 | 0 | 16 ,, | $2\frac{1}{2}$ ,, | 22 | 0 |
| 8 ,, | 3 ,, | 11 | 0 | | | | |

### கம்பளிப் போர்வைகள்.

பனி குளிர் முதலியவைகளுக்கு உபயோகிக்கக்கூடிய நைசான கம்பளி ரோமத்தால் நிசவு செய்த போர்வைகள் உறுதியும், மிருதுவும், நேர்த்தியும். நீடித்து நிலை நிற்கும் சாயமுமுள்ளது. வெள்ளை, மஞ்சள், ரோஸ், பச்சை, சிவப்பு, காக்கி, வாதாமி முதலிய பலகலர்களிலுமுண்டு. 6 முழ நீளம் 3 முழ அகலம் விலை ரூ $4\frac{1}{2}$, 5, 7.

மேகவர்ண போர்வை 6 முழம் நீளம் 3 முழம் அகலம் ஜிர் 1, ரூபா. 7—8.

ஷை ஷை ஷை ,, 2, ரூபா. 6—0.

"காபூல் பால்காயம்" 10 தோலா டப்பி 1க்கு ரூ 1.

### Brass toys.

இது அருமைக்குழந்தைகளின் மனதை ரமிக்கச்செய்யக்கூடியவிளையாட்டுச் சாமான். இது இந்தியர்களின் வீடுகளில் சமையல்செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. இந்த விளையாட்டு செற்று ஒவ்வொன்றிலும் 32 வித சாமான்களடங்கியிருக்கும். பித்தளையினால் செய்யப்பெற்று மிகப் பளபளப்பும் அழகும் வாய்ந்தவை. ஐரோப்பியர்களும் வெகு பிரியத்துடன் ஏராளமாக வாங்குகிறார்கள். இது இந்தியரின் கை வேலை.

☞ இந்த அருமையான விளையாட்டு சாமான் இந்தியாவில் பிரபல பத்திரிகையாகிய "பம்பாய் டைம்ஸ் ஆப் இந்தியா" வால் மிகவும் புகழ்ந்து கொண்டாடப்பெற்றது.

| | | |
|---|---|---|
| இதின் விலைகள். | பெரிய சவிஸ் செற்று 1க்கு ரூ | 3—8—0. |
| | மத்திம ஷை | 2—0—0. |
| | சின்ன ஷை | 1—8—0. |

கேட்லாக் இனாம்.

## கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,

பட்டு வர்த்தகா், ஸ்ரீகாசி. **Benares City**